மலர்-3 இதழ்-66 மே 16-31 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



# கடவுளுக்கு உருவம் உண்டா?



ஒரு சமயம் ராமகிருஷ்ண பரமஹம்சரை சந்தித்த ஒரு பக்தர், கடவுளுக்கு உருவம் உண்டா? என்று கேட்டார்.

அதற்கு ராமகிருஷ்ணர், இறைவன் உருவம் உடையவர், உருவம் அற்றவர்இந்த இரண்டும் அவரே!

அதாவது பனிக்கட்டியையும், தண்ணீரையும் போல என்று பதில் கூறினார்.

இறைவன் என்பவன் முடிவில்லாமல் பரந்து கிடக்கும் மகா சமுத்திரத்தைப் போன்றவன்.

சமுத்திரம் அதீத குளிர்ச்சியின் காரணமாக சில இடங்களில் உறைந்திருக்கும்.

அவ்விதம் உறைந்த பனிக் கட்டிகள் பலவித வடிவங்களில் இருக்கும்.

ஆனால் சிறிது வெப்பம் அதிகரித்ததும் பனி உருகி நீரோடு நீராகக் கலந்து விடும்.

பனிக்கட்டியும் நீரும் ஒரே சமுத்திரத்தைச் சேர்ந்தவை தான். இறைவனும் அப்படித் தான்.

பக்தியின் குளிர்ச்சியால் அவன் பக்தர்களுக்கு தகுந்தாற்போல பலவேறு வடிவங்களில் தோன்றுகிறான்.

ஞானம் என்ற வெம்மை செயல்பட ஆரம்பித்ததும், அவனும் வடிவமற்றவனாகி விடுகிறான்.

இவ்வாறாக, சாதாரண பக்தனுக்கு வடிவம் தேவைப்படுகிறது.

ஆனால் அனைத்தும் அறிந்த ஞானிக்கு வடிவம் தேவைப்படுவதில்லை.

அர்த்தமுள்ள இந்து தர்மம் ஆன்மீக வாழ்க்கைக்கு இந்து சமய விழிப்புணர்வு அவசியம் என்பதை அனைவருக் கும் தெரியப்படுத்தி அகிலம் புகழும் பாரதத்தை உருவாக்குவோம்...!

# நீர்நிலைகளில் குளிக்கவேண்டிய வழிமுறைகள்.....



கண்ணன் கோபியரின் ஆடைகளை மரக்கிளைகளில் மாட்டி வைத்தது குழந்தைக் குறும்பு மட்டுமல்ல.

அது ஒரு தண்டனை.

நதியிலோ அல்லது வீட்டிலோ தனிமையில் நீராடி னாலும் கூட உடையின்றி நீராடுவது நதி களையும் புண்ய தீர்த்தங்களையும் அவமதிக்கும் செயல். வீட்டில் குளியலறையில் கூட ஒற்றை வஸ்திரம் தரித்தே நீராட வேண்டும்.

அல்லும் பகலும் மருத்துகள் என்போர் நம்மைக் கண்காணிக்க பகவானால் ஆணையிடப்பட்டுள்ளனர். இன்னும் எத்தனையோ தேவதைகள் நாம் செய்யும் ஒவ்வொன்றையும் கண்காணித்துக் கொண்டுள்ளனர்.

சித்ரகுப்தனுக்குத் தெரியாமல் யாரும் எதையும் செய்ய முடியாது. ஆகவே நம்மைச் சுற்றியுள்ள இந்த தேவதை களை அவமதிக்கும் செயலாகக் கருதி ஆடை யின்றி நீராடக் கூடாது என்கிறது ஸாஸ்த்ரம்.

கோபியர்கள் ஸாஸ்த்ர விரோதமாக நடந்து கொண்டதால் அவர்கள் வீசியெறிந்த ஆடைகளை மரக்கிளைகளில் தொங்க விட்டு அவர்கள் செய்த தவறை அவர்களுக்கு உணர்த்தினான் கண்ணன்.

- Geetha Suresh

# அவங்க வயத்துப் பொழப்ப நாம ஏன் தடுக்கணும்?



ஒரு முறை மஹாபெரியவர் காமாட்சிஅம்மன் கோவில் குளத்தில் ஸ்நானம் செய்யப் போனார்.

அப்போது அங்கே கடவுள் மறுப்பாளர்கள் எதிர்மறை வாசகங்களைத் தாங்கிய பதாகைகளைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். பெரியவருடன் வந்தவர்கள், அவ்வாசகங்களைக் கண்டால் பெரியவர் மனம் புண்படுமே என்று பதைபதைத்துப்போனார்கள். அவை பெரியவர் கண்களில் பட்டு விடாத வண்ணம் #மறைத்துக்கொண்டார்கள்.

ஆனால், பெரியவர் கண்ணுக்குத் தப்பாமல் ஒரு விஷயம் நடந்து விடமுடியுமா என்ன?

ஸ்நான ஸங்கல்பம் துவங்கும் முன் ஒருவரை அழைத்து,கடவுள் மறுப்பாளர் கூட்டத்தில் பொறுப்பாளரைப் போய் பார்த்து, அவர்கள் வேறெங்காவது ப்ரசாரம் செய்யாமல், நாம் இருக்கும் இடத்தைத் தேடி வந்து எதற்காகச் செய்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டு வா என்று அனுப்பினார்.

அவருக்கு விருப்பமில்லை என்றாலும் பெரியவா வார்த்தைக்காகப் போனார்.

கடவுள் மறுப்பாளர் என்ன சொன்னார் தெரியுமா?

பெரியவர் மேல நிறைய மரியாதை உண்டுங்க. ஆனா, இந்த பேனரையெல்லாம் மத்த இடத்தில் பிடிச்சு என்ன ப்ரயோசனம். கோவில் எதிர, பெரியவர் எதிரன்னு பிடிச்சு அதை படம் பிடிச்சு காமிச்சாதான், இவ்வளோ பேர் கூடுன இடத்துல நாம ப்ரசாரம் செய்தோம்னு எங்களுக்கு மேலிடத்திலேர்ந்து ஏதாவது பணம் வரும். மேற்கொண்டு பிழைப்பை பாக்கணுமே. இருந்தாலும் பெரியவர் மனம் வருத்தப்படும்னா நாங்க வேற இடத்துக்குப் போறோம் என்றார்.

அவர் அப்படியே போய் பெரியவரிடம் சொன்னார். பெரியவர் சிரித்துக்கொண்டே சொன்னார்,

நாம ஒன்னுமே பண்ணாம, நம்ம எதிர நின்னாலே அவாளுக்கு வயத்துப் பொழப்புக்கு ஆகும்னா அதை நாம ஏன் தடுக்கணும்? இனிமே நாம எங்க போனாலும் அவாளை வந்து பேனர் பிடிக்கச்சொல்லு. அம்பாள் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொருவிதமா படியளக்கறா. அவாளுக்கும் குடும்பம் இருக்கே என்றார்.

பெரியவர் பெரியவர்தான்.


ஆன்மிகமலர் மெயில் புக்





# முருகன் நினைத்தால்தான் தரிசிக்க முடியும் சக்தி வாய்ந்த பூம்பாறை முருகன் கோயில்

கொடைக்கானலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்"

இந்த தேதியில், இந்த நேரத்தில் வரவேண்டும் என்பது அவன் விருப்பம் . மிகவும் சக்திவாய்ந்த நவபாசான முருகன்.

இந்தியாவில் உள்ள எல்லா கோவில்களிலும் ஐம்பொன் வெங்கலம் கற்களால் ஆன சிலைகள்தான் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவ பாஷானத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன, அவை

1. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி முருகன் சிலை,
2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

உலகிலேய நவபாஷான சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் மாமுனிசித்தர் போகர் என்ற மாமுனிவராகும். இவர் உருவாக்கிய பழனி மலை முருகன் மட்டும் தான் என்று எல்லோரும் அறிவர் ஆனாலும் பூம்பாறை முருகன் சிலையும் அவர்தான் நவபாஷானத்தால் உ ருவாக்கியவர் என்பது அறியாத தெரியாத செய்தியும் கூட, அதுபோல் அருள் பாலிப்பதிலும் பழனி முருகன் போன்று அருள் தர வல்லவர் என்பது அந்த கோவிலுக்கு சென்று அனுபவ ரீதியாக பயன் அடைந்தவர்களுக்குத்தான் தெரியும்.

சுமார் 10/12ம் நூற்றாண்டு வாக்கில் மாமுனி சித்தர் போகர் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பாண்டவர் வனவாசம் மேற்கொண்ட போது கடைசி 12வது வனமான பழனி கொடைக்கானல் மேற்கு தொடர்ச்சி மலையாகும்.

பழனி மலைக்கும், பூம்பாறை மலைக்கும் நடுவில் உள்ள யானை முட்டி குகையையில் அமர்ந்து, தான் கற்று வந்த கலைகளை சோதிக்க அதற்கான மூலிகைகள் ராசாயண பொருட்கள் சேகரித்து முதலில் ஒரு முருகன் சிலையை உருவாக்கினார்.

அந்த சிலையைத் தான் பழனி மலை மீது பிரதிஷ்டை செய்தார். தண்டம் கொண்டு அச்சிலையை உருவாக்கியதால் அதற்கு தண்டாயுதபாணி என்று பெயர் சூட்டினார்.



அக்கோ விலை இறைவனிடம் வேண்டி சிவ பூதங்களால் கோவில் மற்றும் மண்டபகங்களை கட்ட செய்தார் என்பது வரலாறு.

பின்னர் மறுபடியும் சீனநாட்டிற்கு சென்று பஞ்சபூத சக்திகளை மீண்டும் பெற்று யானை முட்டி குகைக்கு வந்து ஞான நிலையை அடையும் பிரம்மத்தை உணர்ந்து கொள்ளவும் ஆதிபராசக்தியின் துணைகொண்டு குருமூப்பு என்ற அருமருந்தை நிலைநிறுத்தவும் பஞ்சபூதங்களை நிலைப்படுத்தி அதன் மூலம் குருமூப்பு சிலையை உருவாக்கினார்,

அந்த சிலைதான் பூம்பாறை மலையுச்சியுள்ள சேர மன்னன் தவத்திற்கு பழனி முருகன் திருமண காட்சியளித்து சேர மன்னனால் கட்டப்பட்ட திருமண மண்டபத்தில் பிரதிஷ்டை செய்தார்.

அருணகிரிநாதர் பூம்பாறை மலைக்கு வந்து முருகனை தரிசிக்க வந்தார். அப்போது இரவு நேரமானதால் கோவில் மண்டபத்தில் தங்கி தூங்கிவிட்டார்.

அப்போது ராட்சசி ஒருவள் அருணகிரிநாதரை கொல்ல வந்தபோது முருகன் குழந்தை வடிவம் கொண்டு காவியுடை அணிந்திருந்த அருணகிரி நாதர் மீது ஏறி விளையாடிக்கொண்டிருந்ததைக்கண்டு குழந்தையும் தாயும்தான் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி அருணகிரிநாதரைக் கொல்லாமல் சென்று விட்டதாம்.



ஆன்மிகமலர் மெயில் புக்
16-31 மே 2019 5
www.aanmeegamalar.com

# ஆறுவித பாவம் போக்கும் ஆறுவிரல் பெருமாள்

திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுக்கா சேங்காலிபுரம் என்ற கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபரிமள ஸ்ரீரங்கநாதப் பெருமாள் சயனத்திருக்கோலத்தில் ஸ்ரீதேவி பூமிதேவியுடன் எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோயிலை பல திவ்ய தேசங்களால் சூழப்பெற்ற மிகப்புராதனமான புன்னாகவனம் என்று புராணத்தில் கூறப்படுகிறது.

இத்திருத்தலத்தில் மூன்று சிவன் கோயில்கள், காளி கோயில், வரதராஜர், பரிமள ரங்கநாதர் பெருமாள் கோயில்கள், ஸ்ரீ தத்தாத்ரேயர் கோயில், வால்மீகி பர்ணசாலை என்ற பெயரில் ஸ்ரீராமர் சந்நிதி, சுப்பிரமணிய சுவாமி கோயில், கிராம தேவதை கோயில், மகான் ஸ்ரீ முத்தண்ணாவாள் அதிஷ்டானம் என திரும்பிய இடமெல்லாம் திருக்கோயில்கள் சூழ அமையப்பெற்றுள்ளது விசேஷமாகும். அவ்வகையில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீபரிமளரங்கநாதர் ஆலயம் மிகவும் சிறப்புப் பெற்றது.

பிரகலாதன் தனக்கு ஏற்பட்ட பித்ருஹத்தி தோஷம் நீங்கவும், துருவ வம்சத்தில் வந்த ப்ருது மன்னன் சம்பூர்ண ஞானம் பெறவேண்டியும், தசரத மன்னன் சத்புத்திரர்களை பெறுவதற்கும், பாண்டவர் வம்சத்தில் வந்த ஜனமேஜயன் தனக்கு உண்டான சர்ப்பதோஷ நிவர்த்திக்காகவும் இங்கு வந்து ரங்கநாதப் பெருமானை சேவித்து தங்கள் எண்ணம் ஈடேறப் பெற்றனர். பராசர முனிவருக்கு தவப்பலன் கிட்டியதும் இத்தலத்தில் தான். மேலும் மகரிஷிகள், முனிவர்கள், மன்னர்களும் இந்தப் பெருமாளை சேவித்து நற்பலன்கள் பெற்றுள்ளனர்.

இங்குள்ள பெருமாளுக்கு "ஸ்வயம் கலிஹரர்' என்ற பெயர் புராணத்தில் உள்ளது. அதனால் இந்த சேஷத்ரம் "ஸ்வயங்கலிஹரபுரம்'





எனப்பட்டு பின்னர் "சேங்காலிபுரம்' ஆயிற்று. இக்கலியுகத்தில், கர்ணபரம்பரையாக கூறப்பட்டு வரும் தகவல்களின்படி தற்போது பெருமாள் இருக்கும் இடம் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் பெரிய மண்மேடாகவும், சப்பாத்திக்காடாகவும் காட்சியளித்ததாம்.

ஒரு சித்தபுருஷர் அறிவுறுத்தலின் பேரில் இந்த இடத்தை தோண்டிப் பார்க்கையில் ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்ட நிலையில் நன்கு அமர்ந்த நிலையில் உள்ள ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் விக்ரகம் கிடைத்துள்ளது. அதனை அங்கேயே வைத்து கோயில் அமைத்ததாக வரலாறு.

இந்த பெருமாள் அதிசய பெருமாள் ஆறு கால் விரல் கொண்ட அதிர்ஷ்ட பெருமாள் இந்த ஆறு விரல்களுக்கும் ஆறு சாபங்கள் நிவர்த்தி ஆகும் என கூறுகின்றனர்.

1. அபஸ்மாரம் (காக்காய் வலிப்பு), 2. நாகதோஷம், 3. புத்ரதோஷம், 4. பித்ரு சாபம், 5. மனக்கலக்கம், 6. கலிதோஷம் என ஆறு வகையான இடர்கள் நீங்கும் பொருட்டு நமக்கு அருளுவதற்காக கலியுகம் முடிய இந்த அமைப்புடன் பெருமாள் காணப்படுகிறார் என்று இவ்வூர் ஆன்றோர்களும், பெரியோர்களும் கூறுகின்றனர்.

பொதுவாக, ஆறுவிரல்கள் கொண்டவர்களை அதிர்ஷ்டக்காரன் என்று கூறுவது வழக்கம். அவ்வகையில் இந்த பெருமானையும் அதிர்ஷ்டப் பெருமாள் என பக்தியுடன் மக்கள் அழைக்கின்றனர்.

இத்திருத்தலத்தில் அமாவாசையன்று யோகம் நடைபெறும். இந்த யோகத்தில் கலந்து கொள்ள வரும் பக்தர்கள் அவர்களால் முடிந்த பொருள்களை எடுத்து வருகின்றனர். அவர்கள் எடுத்து வரும் பொருள்களை அவர்கள் முன்னிலையில் வைத்து யோகம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொண்டவர்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் வருவதாக பக்தர்கள் கூறுகின்றனர்.

தொடர்புக்கு: 94440 56737 / 94441 43331.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# நம்பினால் பாதணிகளையும் சுமப்பான் கண்ணன்



குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையிலான யுத்தத்தில் ஒன்பது நாள்கள் முடிந்துவிட்டன. `ஒன்பது நாள்கள் கடந்தும் பாண்டவர்களை வீழ்த்த முடியவில்லையே!' என்று நினைத்த துரியோதனன், பீஷ்மரிடம் தான் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டான்.

`தாத்தா பீஷ்மர், பாண்டவர்களை ஒழிக்க வேண்டும் என்ற உறுதியுடன் போரிடவில்லை' என்றே நினைத்தான். தன் எண்ணத்தை மிகக் கோபத்துடன் பீஷ்மரிடமும் தெரிவித்தான். துரியோதனின் கடுமையைக் கண்ட பீஷ்மரும், அதே கடுமையுடன் மறுநாள் போரில் பாண்டவர்களை அடியோடு வீழ்த்துவதாக சபதம் செய்தார்.

ஆனால், துரியோதனனோ, ``பாண்டவர்களை வீழ்த்துவேன் என்று சொல்லாதீர்கள். `அவர்களைப் போரில் கொல்வேன்" என்று சொல்லுங்கள்' என்றான். செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்க வேண்டுமே என்பதற்காக பீஷ்மரும், ``அப்படியே ஆகட்டும்" என்று கூறிவிட்டார். அதே தருணத்தில் பாண்டவர்களின் பாசறையில் இருந்த கண்ணன் லேசாகச் சிரித்தான். அவனுடைய சிரிப்பின் காரணம் அங்கிருந்த பாண்டவர்களுக்குப் புரியவில்லை.

சற்றைக்கெல்லாம், பீஷ்மர் செய்தசபதம் பாண்டவர்களுக்குத் தெரியவந்தது. அர்ஜுனன் உட்பட அனைவருக்கும் கலக்கம் ஏற்பட்டு விட்டது. `பிதாமகர் பீஷ்மர் எவராலும் வெற்றி கொள்ள முடியாதவர் ஆயிற்றே. நன்றிக் கடனுக்காக அவர் துரியோதனன் பக்கம் இருந்தாலும், தர்மம் வெல்லும்' என்று நமக்கு ஆசி கூறியவர் ஆயிற்றே. அவரே இப்போது நம்மை ஒழிப்பதாக சபதம் செய்திருப்பதால், நிலைமை நமக்கு பாதகமாகத்தானே இருக்கும்'என்று நடுங்கினார்கள்.

பாண்டவர்களின் இந்தச் சோர்வையும் கலக்கத்தையும் கண்ட பாஞ்சாலி, மிகவும் கவலை கொண்டாள். `இனி தன்னுடைய சபதம் என்னாவது? போரின் திசையே மாறி விடும் போலிருக்கிறதே. இந்தக் கண்ணன் என்ன ஆனார்... அவருக்கு இதெல்லாம் தெரியுமா?' இப்படியெல்லாம் பாஞ்சாலி நினைத்துக்கொண்டிருந்தபோதே, கண்ணன் அங்கே வந்து சேர்ந்தான்.

பாஞ்சாலியைப் பார்த்து, ``சத்தம் செய்யாமல் என் பின்னால் வா'' என்று மிக மெல்லிய குரலில் கூறி, அந்த நள்ளிரவில் அவளை எங்கேயோ அழைத்துச் சென்றான். போர்க்களத்தினூடே கண்ணன் நடந்து சென்றுகொண்டிந்தான். ரணகளமாக மாறியிருந்த யுத்தபூமியில் மரண அவஸ்தையில் வீரர்கள் எழுப்பிய அவலக் குரல்களின் ஒலி, அந்தப் பிரதேசத்தையே அமானுஷ்யமாக மாற்றியிருந்தது. ஆனாலும், கண்ணன் உடனிருக்கிறான் என்ற தைரியத்தில் பாஞ்சாலிக்குச் சிறிதும் அச்சம் ஏற்படவில்லை. எதையும் பொருட்படுத்தாமல் கண்ணனின் பின்னால் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தாள்.

யுத்தகளத்தைவிட்டுச் சற்று விலகியதும் மற்றொரு சத்தம் கேட்டது. அரசகுலத்தில் பிறந்தவள் ஆதலால், பாஞ்சாலி அணிந்திருந்த விலையுயர்ந்த காலணிகள் எழுப்பிய ஓசைதான் அது. திடீரென்று ஓரிடத்தில் நின்ற கண்ணன், பாஞ்சாலியைப் பார்த்து, ``சகோதரி, உன் காலணிகள் மிகவும் சத்தமெழுப்புகின்றன. அவற்றைக் கழற்றிப் போடு'' என்று கூறினான். பாஞ்சாலியும் அப்படியே காலணிகளைக் கழற்றி வீசினாள்.

பின்னர், தொலைவிலிருந்த ஒரு கூடாரத்தைச் சுட்டிக் காட்டிய கண்ணன், ``பாஞ்சாலி, நீ எவரும் அறியாமல் அந்தக் கூடாரத்துக்குச் செல். உள்ளே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்கும் மனிதரின் காலில் விழு. மற்றபடி ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்காதே'' என்றான்.

பாஞ்சாலியும் கண்ணன் சொன்னபடியே கூடாரத்துக்குள் சத்தம் செய்யாமல் நுழைந்தாள். அங்கே ஒரு மனிதர் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார். அவர் திரும்பிப் பார்ப்பதற்குள் அவருடைய காலில் விழ வேண்டும் என்ற வேகத்துடன் அவருடைய கால்களில் விழுந்தாள் பாஞ்சாலி. யாரோ ஒரு பெண் தன் காலில் விழுவதைக் கண்ட பீஷ்மர்,

``தீர்க்கசுமங்கலியாக இரு பெண்ணே'' என்று வாழ்த்தினார். பின்னர் அவளை எழுந்திருக்கச் சொன்னதுடன், அவள் யாரென்றும் கேட்டார்.

பாஞ்சாலி எழுந்தாள். அவளைப் பார்த்ததுமே பீஷ்மர் திடுக்கிட்டார். `போயும் போயும் இவளையா வாழ்த்தினோம்?' என்று தனக்குள் மருகினார். நாளைய போரில் யாரை ஒழித்துக்கட்டப்போவதாக துரியோதனனுக்கு வாக்களித்திருந்தாரோ, அந்தப் பாண்டவர்களின் பத்தினியை, `தீர்க்கச் சுமங்கலியாக இரு' என்றல்லவா வாழ்த்திவிட்டார். தெய்வம் தன்னை மிகவும் சோதிப்பதாக எண்ணி வருந்தினார் பீஷ்மர்.

பாஞ்சாலியைப் பார்த்த பீஷ்மர், ``அம்மா பாஞ்சாலி, பிணங்கள் குவிந்திருக்கும் இந்த யுத்தக் களத்தினூடே நீ தனித்தா வந்தாய்? உன்னை யார் இங்கே அழைத்து வந்தார்கள்?'' என்று கேட்டார். அப்போது கூடாரத்தின் வாயிலில் ஏதோ நிழல் அசைவதுபோல் தெரிந்தது. அங்கே கண்ணன் நின்றுகொண்டிருந்தான். பீஷ்மருக்கு என்ன நடந்திருக்கும் என்பது புரிந்துவிட்டது.

``வா கண்ணா, வா. இது உன் வேலையாகத்தான் இருக்கும் என்று நான் நினைத்தேன். இது என்ன கையில் ஏதோ துணிமுடிச்சு?'' என்று கேட்டார்.

``ஓ, இதுவா? பாஞ்சாலியின் பாதணிகள்தாம் இவை. அதிக ஓசை எழுப்பவே கழற்றச் சொன்னேன். அதைத்தான் என் உத்தரியத்தில் முடிந்துவைத்திருக்கிறேன்'' என்றான்.

கண்ணன் சொன்னதுதான் தாமதம்... திரௌபதி பாய்ந்து சென்று அதைப் பிடுங்கினாள். ``கண்ணா! இது என்ன சோதனை... என் காலணிகளை நீ சுமப்பதா? என்னை மகாபாவி யாக்க வேண்டுமென்பதுதான் உன் எண்ணமா?'' அவள் கண்கள் கண்ணீரை உகுத்தன.

``தங்கையின் செருப்பை அண்ணன் தூக்குவது தவறல்ல. பேசா திரு. பெரியவர் பீஷ்மரிடம் உன் கோரிக்கையைச் சொன்னாயல்லவா..." என்றான் கண்ணன். பீஷ்மர் குறுக்கிட்டு, ``மாயவனே! அவள் ஏதும் என்னிடம் சொல்லவில்லை. ஆனால், நான் என்ன சொல்ல வேண்டுமென்று நீ தீர்மானித்திருக்கிறாயோ அதை நான் அந்தப் பெண்ணுக்கு ஆசிமொழியாகச் சொல்லிவிட்டேன்.

நீ பொல்லாதவன். உன்னை அபயம் என்றெண்ணியிருப்போரைக் காக்க, அவர்களின் பாதணிகளைக்கூட தாங்கிக்கொண்டிருப்பாய். பாண்டவர்களுக்கு உன் அருள்இருக்கும்போது இந்த பீஷ்மனால் அவர்களை என்ன செய்துவிட முடியும்? கோபாலா, நீ யார் என்பதை நன்றாக அறிந்தவன் நான், ஏதோ உணர்ச்சிவசத்தில் என்னால் எல்லாம் ஆகுமென்று நினைத்துவிட்டேன். அந்தத் தவற்றைச் சுட்டிக்காட்ட, பக்தர்களை ரட்சிக்கும் பக்தவத்சலனாக இப்படி பாஞ்சாலியின் பாதணிகளைச் சுமந்து வந்து நிற்க வேண்டுமா?''என்று வினவினார். பிதாமகரின் கண்களிலும் நீரருவிகள் கொப்பளித்தன. மறுநாள் போரில் அந்தப் பழுத்த பழம் அம்புப் படுக்கையில் விழுந்ததைத்தான் பாரதம் சொல்லுமே..?!









# மகத்துவம் வாய்ந்த மாங்கல்ய சரடு

இன்றைய காலக்கட்டத்தில் பேஷனாக எண்ணிக் கொண்டு பலரும் தங்கச்சங்கிலியில் மாங்கல்யத்தை சேர்த்து விடுகின்றனர். "மாங்கல்யச் சரடைத்தான்" சுமங்கலித்துவம் நிறைந்த மங்களப் பொருளாகக் குறிக்கின்றனர் சான்றோர்.

பஞ்ச பூத சக்திகள் நிறைந்து கிட்டுவதுதான் சுமங்கலித்துவம் ஆகும். பருத்தி இழைகளால் ஆன மாங்கல்யச் சரடிற்குத்தான் பஞ்ச பூத தெய்வீக சக்திகளை ஈர்த்து சுமங்கலித்துவ சக்தியாக மாற்றக்கூடிய அருட்சக்தி உண்டு. ஆதலின் மாங்கல்யத்தை மாங்கல்யச் சரடில்தான் கோர்க்க வேண்டுமே தவிர தங்கச்சங்கிலியில் ஒரு போதும் கோர்த்தல் கூடாது.

சரடினால் மாங்கல்யம் போடுபவர்களுக்கு மட்டும் நீண்ட ஆயுளுடன் இருப்பாரா? என்ற சந்தேகம் எழலாம். ஆனால் நீங்கள் நினைக்கும் எண்ணம் வேறு சாதாரணமான நிலையில் கூட பெண்களின் மஞ்சள் கயிற்றுக்கு என்று ஒரு மகிமை உண்டு. தோஷங்கள் உடனே அவரை பாதிக்காது. கர்ம வினைகள் குறையத் தொடங்கும்.

குங்கும அர்ச்சனையின் பலன்கள் சரடுக்கு உண்டு. உடனே போகும் உயிரை கூட அந்த தாலி சரடின் மகத்துவம் காக்கும். தீவினை தோஷங்களில் ஒரு பகுதியை மாங்கல்யச் சரடானது தம்முன் ஈர்த்து ஆத்மாக்னியில் பஸ்மம் செய்து விடுகின்றது.

ஏனெனில் மாங்கல்யமானது ஒரு இல்லறப் பெண்மணியின் கழுத்தில் எப்போதும் திகழ்வதால் அதுவே தெய்வீகத் துணையாக இருந்து எப்போதும் சுமங்கலித்துவதைக் கட்டி காப்பதாகும். பெண்களுக்கு மாங்கல்யமே பிரம்ம முடிச்சு ஆகும்.

# உயிரை காக்கும் வாழை இலைக் குளியல்









சித்த மருத்துவத்தில் மனித உடலை காக்கப் பல்வேறு வகையான குளியல் முறைகள் கூறப்பட்டுள்ளது. எண்ணைக் குளியல், சூரியக் குளியல், மூலிகை குளியல் என்று பல்வேறு குளியல்கள் இருந்தாலும், இவற்றில் சிறந்தது வாழையிலைக் குளியல்தான்.

இந்த வாழை இலைக்குளியல் செய்வதால் போகப் போகும் உயிரைக்கூட திரும்ப மீட்க முடியும் என்று கூறுகின்றனர் இயற்கை ஞானி...

இதுக்கு பேருதான் வாழை இலைக் குளியல்.

வாழை இலையால நம்ம உடம்பு முழுவதும் மறைக்கப்பட்டு வெயிலில் ஒரு மணி நேரம் இருக்க வேண்டும்.

வாழை இலைக்குளியல் செய்வதால் போகப் போகும் உயிரைக்கூட திரும்ப மீட்க முடியும் என்கிறார்கள் இயற்கை ஞானிகள்.!

வாசியை சுத்தப்படுத்தும் இரகசியம் தெரிந்து விட்டால் உடலின் சேர்ந்து விட்ட அளவுக்கதிகமான கரியமில வாயுவை ஒரு மணி நேரத்தில் வெளியேற்றி விடலாமே.!

**வாழை இலைக்குளியல் செய்முறை**

1. இயற்கை வழியில் விளைவித்த வாழை இலைகளை ஆளுக்கு தகுந்தாற்போலும் உருவத்திற்கு தகுந்தாற் போலும் சேகரித்துக் கொள்ள வேண்டும். சுமாராக ஒருவருக்கு எட்டு இலைகள் வரை தேவைப்படும்.!
2. தரையில் ஆறு வாழை நார், நூல் கயிறு அல்லது தென்னங்கயிற்றை வரிசையாக போட வேண்டும்.
3. அதன் மேல் நான்கு வாழை இலைகளை நன்றாக துடைத்து இலையின் தண்டை கையால் லேசாக சதைத்து போடவேண்டும்.!
4. ஒரு காட்டன் டவலை சிறிது நனைத்து தலையில் மப்ளர்போல் சுற்றிக் கட்டிக் கொள்ள வேண்டும்.
5. நான்கு முதல் ஆறு டம்ளர் வரை நீரை குளியல் செய்யப் போகின்ற வருக்கு குடிக்க கொடுக்க வேண்டும்.!
6. பிறகு மெதுவாக அவரை வாழையில் படுக்க வைத்து விட்டு அவரின் மேல் நான்கு முதல் ஆறு இலைகளை தலை முதல் பாதம் வரை வெளியே தெரியாமல் வைத்து நன்றாக மூடிவிடவும். சுவாசம் செய்வதற்காக மூக்கின் மேல் வைக்கும் இலையை மட்டும் லேசாக வெட்டிக் கொள்ள வேண்டும்.!
7. அப்படியே கயிறால் கட்டி படுக்க விடவும். இருபது முதல் 30 நிமிடம் வரை இப்படி இருக்க வேண்டும். உடல் முழுவதும் நன்றாக வேர்த்து இனிமேல் இருக்க முடியாது என்ற நிலை வந்தவுடன். கட்டுகளை அவிழ்த்து

இலையை எடுத்துவிடவும்.

8. எழுந்தவுடன் பார்த்தால் கிட்டத்தட்ட இரண்டு முதல் நான்கு லிட்டர் வரை உடலில் இருந்து கெட்டநீர் வெளியேறி இருக்கும்.!

9.எழுந்தவரை நன்றாக ஐந்துமுறை சுவாசம் செய்ய வைத்து தேன் மற்றும் சிறிது இந்துப்புக்கலந்த இரண்டு டம்ளர் நீரை குடிக்க கொடுக்க வேண்டும். பிறகு 15 நிமிடம் கழித்து குளித்து விடலாம்.!

**வாழைகுளியல் பலன்கள்**

1. உடல் எடை சீராக இருக்கும்
2. உடலில் உள்ள கெட்ட நீரும் காற்றும் வெளியேறிவிடும்
3. தோல் நோய்கள் குணமாகும்
4. ஆஸ்துமா, இழுப்பு, அடுக்குத்தும்மல், உடல் பருமன் போன்ற நோய்கள் கட்டுப்படும்
5. சிறுநீரகம், கணையம், கல்லீரல் பலப்படும்
6. ஆண்மைக் குறைவு, கர்பபைக் கோளாறு குணமாகும்
7. உடலுக்கு புத்துணர்வும் புதிய நம்பிக்கையும் கிடைக்கும்
8. கை,கால் வலி, மூட்டுவலி, முதுகுவலி தண்டுவடக் கோளாறுகள் கட்டுப்படும்
9. பசியின்மை, அஜீரணக் கோளாறு, பித்த வாந்தி குணமாகும்
10. ஜாதகத்தில் சிலருக்கு ஏற்படும் மரண கண்டத்தில் இருந்து தப்புவிக்கும்.!

இது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ அற்புத பலன்களை உடையது வாழை இலைக்குளியல். ஏனெனில் உடலில் பிராணசக்தி துய்மையடையும் உடல், மனம், ஆன்மா அனைத்துமே தூய்மையடையும்.!

**வாழைகுளியல் நேரம்:**

காலையில் 8 முதல் 11 மணிவரையும் மாலையில் 3 மணி முதல் 5 மணிவரையும் வாழையிலைக் குளியல் செய்ய ஏற்ற நேரம்.!

கீழே விரிப்பை விரித்து மொட்டை மாடி, வெட்டவெளியில் மட்டுமே குளியல் செய்ய வேண்டும். பெண்கள் சுற்றிலும் மறைவான வெட்ட வெளியில் செய்ய வேண்டும்.!

வாழை இலைக்குளியலுக்கு முதல்நாள் முற்றிலும் சமைக்காத உணவை உண்டு வாழை இலைக்குளியல் செய்தால் அதன் பலன் பல மடங்கு உயரும்.!

அதீத மன அழுத்தம், மனக்கோளாறுகள், கர்பிணிப் பெண்கள், இரத்த அழுத்தத்திற்காக பல ஆண்டுகள் மாத்திரை எடுப்பவர்கள், முற்றிய நிலையில் உள்ள இதய நோயாளிகள் வாழை இலை குளியல் எடுப்பதை தவிர்ப்பது நலம் பயக்கும். மற்றபடி 10 வயது முதல் நூறு வயதுவரை உள்ள ஆண், பெண் அனைவரும் வாழையில் குளியல் செய்து உடலில் பிராண சக்தியை அதிகரிக்கலாம்.!

## நிர்மால்யம்

நிர்மால்யம் என்பது பூஜையின் முதல் நாள் போட்டு வாடிய புஷ்பங்களை குறிக்கும். நிர்மால்யங்களை காலில் படாமல் கண்களில் ஒற்றிக் கொண்டு தாம்பாளம், கூடையில் போட்டு வைத்திருந்து ஓடும் தண்ணீரில் விட வேண்டும்.

## மகாலட்சுமி

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் வெண்ணை உருக்கக் கூடாது. காரணம் மேற்படி கிழமைகளில் லட்சுமிக்கு உகந்தவை ஆதலாலும் வெண்ணையில் மகாலட்சுமி இருப்பதாலுமே வெண்ணை உருக்கக் கூடாது என்பார்கள்.









# பின்னலின் மகத்துவம்

பின்னல் என்பது உறவைக் குறிக்கிறது. முடியை விரித்து விடுவது அமங்கலமானது. அதாவது முடி என்பது அழகான கூந்தல். அந்த கூந்தலை பின்னி பூ வைத்து பார்ப்பதன் அழகே தனி. ஆனால் இன்றைய சூழல் அப்படியா?

தலைமுடியின் நுனி வழியாக ஆத்மசக்தி வெளியேறுகிறது. நல்ல, தீய உணர்வுகள் அல்லது அதிர்வுகள் வந்து செல்வதற்கான ஊடகம் போன்றது முடியின் நுனி. அப்படியானால் மொட்டை அடித்துக் கொள்கிறார்களே அவர்களை என்ன சொல்வது என்ற கேள்வி எழும் உங்களுக்குள். வெளியிலிருந்து பெறுவதற்கும் ஒன்றுமில்லை. நம்மிடமிருந்து போவதற்கும் ஒன்றுமில்லை என்பதை உணர்த்துவற்காக.

தலைவிரி கோலத்தை தவிர்ப்போம். இது உறவின் மீதான பிடிப்பை அறுக்கக்கூடியது. பின்னல் இதன் அமைப்பு திரிவேணி சங்கமத்தை ஒத்தது. 3 நதிகள் சேரும் போது இரண்டு நதிகள் கண்களுக்கு புலப்படும். (கங்கை, யமுனை) ஒரு நதி கண்களுக்கு புலப்படுவதில்லை (சரஸ்வதி). இதுபோலவே பின்னலின் 3 பகுதிகளில் இரண்டு பகுதிகளே புலப்படுகின்றன.

பின்னலின் வலது பிறந்த வீடு.
இடது புகுந்த வீடு.
நடுப்பகுதி பெண்....

தன்னை மறைத்து இரு வீட்டாரையும் இணைத்து அழகுற தோற்றமளிக்கச் செய்வதே இதன் பொருளாகும். தன்னை முன்னிறுத்தும் பெண்ணை காட்டிலும் தன் குலத்தை முன்னிறுத்துபவளே உயர்ந்தவள் ஆவாள். ஆகையினால் பின்னல் வெறும் அலங்காரம் அல்ல. வாழ்வின் தத்துவம்.

# பிரார்த்தனையின் சிறப்பு

- விளக்கு எரிந்து கொண்டிருக்கும் போது கைவிரலால் எண்ணெய்யிலுள்ள தூசியை எடுப்பதோ திரியை தூண்டுதோ கூடாது.
- எரிந்து கொண்டிருக்கும் தீபத்தை ஆண்கள் அணைக்கக் கூடாது.
- வாழைப் பழத்தில் பத்தியை சொருகி வைக்கக் கூடாது.
- தேங்காய் இரண்டுக்கு மேற்பட்ட துண்டுகளாக உடைந்தால் அதை தெய்வத்திற்கு நிவேதனம் செய்யக்கூடாது.
- புழுங்கல் அரிசியால் சமைக்கப்பட்ட உணவை தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யக்கூடாது.
- மா இலை கட்டுவதால் பல தோஷங்கள் நீங்கும். மா இலை தோரணங்களுக்கு பதிலாக பிளாஸ்டிக், பித்தளை முதலியவற்றால் மாவிலை போன்று தோரணம் கட்டலாகாது.
- தினசரி பிரார்த்தனை என்பது வீட்டு வாசலில் ஓடி வரும் தெளிந்த ஆறு போன்றது. யார் ஒருவர் அதில் தன்னை சுத்தி செய்து கொள்கிறானோ அவர் தன்னை நிர்மலமாக்கிக் கொள்கிறார்.

# வேத காலத்தில் பயன்படுத்திய சோமபாணம்




இந்து மதத்தில் ஒரு குறிப்பிட்ட பாணம் தொடர்ந்து வழக்கத்தில் உள்ளது. இதை சோமா பாணம் என்று கூறுவார்கள் நம் முன்னோர்கள். இது இன்று தயாரிக்கப்படும் மது வகைகளைப் போன்று அல்லாமல் முற்றிலும் இயற்கையின் துணை கொண்டு தயாரிக்கப்படும் ஒருவித பாணமாகும்.

வட இந்தியா மற்றும் காசி போன்ற இடங்களில் இன்றும் வழக்கத்தில் சோமா (ஜங்கிடா) பாணம் அருந்தும் முறை நடைமுறையில் உள் ளது (தற்போது தயாரிக்கப்படும் முறைக்கும் ஆதி காலத்தில் தயாரிக்கும் முறைக்கும் வேறுபாடு அதிகம்)

இந்த சோம பாணம் ஒருவித மயக்க நிலையை ஏற்படுத்தும் என்பதால் இதை மது மற்றும் போதை வஸ்துவிற்கு சமமாக பிற்கால சந்ததியினர் கருதுகின்றனர்.

உண்மையில் வேதகாலத்தில் தயாரிக்கப்பட்ட சோமா பாணம் என்பது மனித உடலுக்கு கேடு விளைவிக்காது, ஆனாலும் அதை அனைவரும் பருக மாட்டார்கள் என்பது உண்மை.

அறுவை சிகிச்சை செய்யும் போது மனிதர்களுக்கு செலுத்தப்படும் அனஸ்தியா மயக்க மருந்து அறுவை சிகிச்சை செய்யும் இடத்தையும், ஒருவித மயக்க நிலையையும் தரும், அது போன்றுதான் இந்த பாணம் ஆன்மிகத்தில் ஒரு குறிப்பிட்ட நிலையை கடந்தவர்கள் மட்டும் பயன்படுத்தியுள்ளனர்.

சுய கட்டுப்பாடு, உடல் உறுப்புகள் கட்டுப் படுத்தும் நிலை, ஆன்மாவை அடக்கி ஆளும் நிலை, மனமெனும் குதிரையை செலுத்தும் நிலை போன்ற பல்வேறு நிலைகளை கடந்து, இறைநிலையை அடையும் நிலையில் உள்ளவர்கள் மட்டுமே, இப்பாணத்தை பயன் படுத்தியுள்ளனர்.

இந்த பாணம் குறித்து தெளிவில்லாமல் பலர் பல்வேறு விதமாக கருத்துக்களை கூறியுள்ளனர். ஆனால் இதுகுறித்த கருத்தை லண்டன் சுவாமி நாதன் என்பவர் மிகத் தெளிவாக எழுதியுள்ளார் அதை பார்ப்போம்.

நான்கு வேதங்களில் மிகவும் மர்மம் நிறைந்தது அதர்வண வேதம். ஏனெனில் ஆதிகால மருத்துவ, விஞ்ஞான உண்மைகள், மாய மந்திர பில்லி சூனியங்கள் நிறைந்தது இந்த வேதம்.

துரதிருஷ்டவசமாக இதில் குறிப்பிடப்படும் மூலிகைகள், தாயத்துக்கள் ஆகியன வழக்கத்தில் இருந்து போய்விட்டதால் என்ன என்றே தெரியவில்லை. ரிக்வேதத்தில் நூற்றுக் கணக்கான இடங்களில் வரும் சோமக் கொடி பற்றியே நமக்கு தெரியவில்லை.

3000 ஆண்டுகளுக்கு முந்தைய ஜில்காமேஷ் (சுமேரிய/ பாபிலோனிய) காவியத்தைப் படித்துப் புரிந்து கொண்டுவிடலாம். அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வேதங்களை அறிவது கடினம். நீண்ட ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்க முடியும்.

ரிக்வேதத்தில் 107 மூலிகை பற்றி வரும் பாடல் பற்றி ஆனால் அதில் 107 மூலிகைகள் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. நம் வசமுள்ள சரக, சுஸ்ருத சம்ஹிதைகளையும், தமிழ் சித்த மருத்துவ நூல்களையும் வேதங்களையும் வைத்துக்கொண்டு கற்றறிந்த அறிஞர்களுடன் சேர்ந்து ஆராய வேண்டும்.

சோம பாணத்தைப் போதையூட்டும் மருந்து என்று வெளிநாட்டுக்காரர்கள் பிதற்றியுள்ளனர். ஆனால் பாண்டியர் தமிழ் கல்வெட்டோ அதை மனோசுத்த மருந்து என்கிறது. நம்மவர்கள் கீதை, குறள், ராமாயணம், மஹாபாரதம் எதையுமே படிக்காமல், சங்க இலக்கிய 30,000 வரிகளைப் படிக்காமல் ஆராய்ச்சிக் கட்டுரை என்ற பெயரில் பல அபத்தங்களை எழுதி வருவது வருந்ததக்கது. முதலில் எல்லாவற்றையும் படிக்க வேண்டும். வெளி நாட்டுக்காரர் சொல்வதைவிட்டுவிட்டு, நம்மவர் அது பற்றி என்ன சொன்னார்கள் என்று முதலில் அறிய வேண்டும்; நம்ப வேண்டும். அப்படிச் செய்தால் புரியாத புதிர்கள் விடுபடும். மர்மங்கள் துலங்கும்!

## இதோ ஜங்கிடா மர்மங்கள்:

ஜங்கிடா என்பது ஒரு மூலிகை என்றும் பல வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து என்றும் கீத், மக்டொனல் இருவரும் எழுதிய வேதப் பொருளகராதி (வேதிக் இண்டெக்ஸ்) கூறுகிறது. அவர்களே இது என்ன தாவரம் என்று தெரியவில்லை என்று ஒப்புகொண்டுவிட்டு கௌசிக சூத்திரத்தில் வரும் குறிப்பில் இதை காலண்ட் என்பவர் “டெர்மினாலியா அர்ஜுனா” என்ற தாவரம் என்று சொல்வதாகவும் குறித்துள்ளனர். டெர்மினாலியா அர்ஜுனா என்பது மருத மரம் ஆக்கும்.

ஆனால் தேவி சந்த் என்பவர் எழுதிய அதர்வண வேத புத்தகத்தில் ஒரு இடத்தில் ஜங்கிடா என்பது கடவுளைக் குறிக்கும் என்று எழுதிவிட்டு பிற இடங்களில் மூலிகை என்று மொழி பெயர்க்கிறார்.

சாயணர் என்ற பெரிய மகான் தான் 700 வருடங்களுக்கு முன் துணிந்து வேதங்களுக்குப் பொருள் எழுதினார். அவர் இந்த ஜங்கிடா என்பது காசி மாநகரத்தில் உள்ள ஒரு மரம் என்கிறார்.

## மருத மரம்

இது இருதய நோய்கள், நரம்புத் தளர்ச்சி





மருத மரம்

போன்ற பல நோய்களைக் குணப்படுத்தும் என்று தெரிகிறது. மருத மரம் குறித்து வெளியான பல மருத்துவ நிபுணர்களின் கட்டுரைகள் இது இருதய மற்றும் ரத்த நாளம் சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தும் என்று எழுதியுள்ளனர். ஆயினும் அவர்களுடைய ஆய்வுகள் முடிவானவை அல்ல. எதிரும் புதிருமாக முடிவுகள் வந்தால் மருத்துவ உலகம் அதை ஏற்காது. வேறு சிலர் ஜங்கிடா என்பதை வேறு சில மூலிகைகளுடன் தொடர்புபடுத்திக் கட்டுரை எழுதியுள்ளனர்.

வேதங்களில் குறிப்பிடப்படும் நூற்றுக்கணக் கான மூலிகைகள், நோய்களின் பெயர்கள் எல்லாம் ஊகத்தின் பெயரிலேயே எழுதப் பட்டுள்ளதால் யார் சொல்வதையும் உண்மை என்றோ தவறு என்றோ சொல்ல முடியவில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால் எதையுமே கேள்விக்குறியாக தொக்கி நிற்கும் வகையில் எழுதிவிட்டு சோம பானம் என்பது மட்டும் என்ன என்று “கண்டுபிடித்துவிட்டதாக” சில வெளி நாட்டினரும் அதைக் கிளிப்பிள்ளை போலத் திருப்பிச் சொல்லும் நம்மூர் பகுத்தறிவுகளும் நகைப்புக்குரியவர்கள் என்பது வேதங்களைப் படித்தோர் அறிவர்.

இனம் இனத்தோடு சேரும். மது, மாது, மாமிசம், போதைப் பொருளில் மூழ்கிக் கிடக் கும் வெளிநாட்டினருக்கு நம் கலாசாரம் எப்படிப் புரியும்? மாக்ஸ்முல்லர் போன்ற பலர் இந்தியாவுக்கு வரமலேயே நம் வேதங்கள் பற்றி எழுதினர்!! நியுயார்க்கிற்குப் போகாமலேயே மேலூர் கொட்டாம்பட்டி முனிசாமி “உலகிலேயே உயரமான கட்டிடங்கள்” என்று புத்தகம் வெளி யிட்டால் அதை தமாஷ் இலக்கிய வகையில் சேர்க்கலாம்.

மேலும் இந்தியா வந்த வெளிநாட்டினருக்கும் உதவியோர் அரைகுறை ஆங்கிலம், அரைகுறை வேத சம்ஸ்கிருதம் அறிந்தவர்களே. ஆகையால் அவர்கள் மொழிபெயர்ப்பும் அரைகுறையே. ரமணர், ராம கிருஷ்ணர், காஞ்சி மஹா சுவாமிகள், சிருங்கேரிப் பெரியவர் போன்ற உத்தமோத்தமர்கள் என்ன சொல்கிறார்களோ அதை நம்பினால் போதும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேதங்களை உள்ளது உள்ளபடி காப்பது நமது கடமை. மனித இனத்தின் முதல் புத்தகம் அது. சுமேரிய எகிப்திய இலக்கியங்களை எல்லாம் படித்தோர்கூட வேதங்களை ஊகிக்கத்தான் முடிகிறது, பொருள் சொல்ல முடியவில்லை. ஆயினும் வேதங்களால் பலன் இல்லாமல் இல்லை.

டெலிவிஷனும். மொபைல் போனும் எப்படிச் செயல்படுகிறது என்பது நமக்குத் தெரியாது ஆயினும் அவைகளைப் பயன்படுத்திப் பயன் அடைகிறோம். இது போல வேதங்களையும் நம்பிக்கையுடன் ஓதினால் பலன் உண்டு.

## வழிகாட்டும் பெரியவர்கள்

காஞ்சி மஹா ஸ்வாமிகள் சொல்கிறார்: கண் தெரியாதவன் ஒருவன் கையில் விளக்கைக் கொண்டு சென்றான். எல்லோரும் கேட்டார்கள், உனக்கோ கண் தெரியாது, எதற்கப்பா விளக்கு? என்று. அவன் சொன்னான், “உண்மைதான் எனக்குக் கண் தெரியாது. இருட்டில் நீங்கள் என்மீது விழுந்து விடக் கூடாதல்லவா? அதற்காகத்தான். இது போலவே நாமும் அர்த்தம் தெரியாதபோதும் வேதம் என்னும் ஒளி விளக்கை ஏந்திச் செல்வோம். அதன் பொருள் தெரிந்த மகான்கள் யுகந்தோறும் அவதரித்து நம்மை வழிகாட்டிச் செல்வர்”.

நன்றி: London swaminathan
swami_48@yahoo.com







# முற்பிறவியிலிருந்து வந்த தனிகுணங்கள் தற்போது நம்மை பாதிக்கின்றன

58 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: “ஓர் இலக்கிய குடும்பத்தில் இலக்கியத்தையே விரும்பாத ஒரு மகனைக் காண்பது அரிதல்ல. அவன் இலக்கியத்தை நேசிக்கும் சுற்றத்தாருடன் வளர்க்கப்பட்டிருந்தும் அவனுக்கு அதில் ஆர்வம் இல்லை. ஏன்? சாதாரணமாகப் பார்க்கும்போது சுற்றுச்சூழலோ அல்லது பாரம்பரியமோ இதை விளக்குவதில்லை. ஆனால் அக்காரணிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாய் இருக்கிறது மறுபிறவி, சில குணாதிசயங்கள் ஒத்திருக்கும் காரணத்தாலேயே ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் பிறந்துள்ளோம். ஆனால் ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தமது சொந்த குறிப்பிடத்தக்க தனிக்குணங்களை தமது முற்பிறவிகளிலிருந்து கொண்டுவரும் ஒரு தனி ஆன்மா ஆவார். எனவே குடும்பங்களில் எப்பொழுதும் சில இயற்கை மரபு ஒற்றுமைகள் இருப்பினும், ஒவ்வொருவரும் நடத்தையில் வேறுபட்டிருக்கிறார்கள்.”



“ஒரு மனிதன் குறிப்பிட்ட ஒரு சமூக மற்றும்தேசிய சூழ் நிலையில் அவனது சொந்த, கடந்த காலவினைகளின் பிரத்யேகமான காரணங்களினால் பிறக்கி றான். ஆகவே மனிதன் அவனே தனது சொந்த விதியின் சிற்பி ஆவான். இப் பிறவியில் அவனது முனைப்பான ஆர்வங்களையும் பழக்கங்களையும் ஆராய்வதின் மூலம் மறுபிறவியில் அவன் எவ்வாறு இருப்பான் என்பதை ஒருவர் பெரும்பாலும் முன்கூட்டியே சொல்லமுடியும்.”

நீங்கள் எதைச்செய்திருந்தாலும் அதை மாற்றமுடியும் மேலும் அவர் அருளுகிறார்:

“ஆன்மாவின் முன்னேற்றத்தி ற்கு சுய ஆராய்வு முக்கியமா னது. பல வருடங்களாக, சோகக் கதைகளைப் படிப்பதே உங்கள் பெருவிருப்பாக இருந்து வருகிறது என்றும், உங்கள் எஞ்சிய வாழ்நாளிலும் அவற்றைத் தொடர்ந்து ரசிப்பீர்கள் என நீங்கள் இயல்பாகவே உணர்கிறீர்கள் என்றும் வைத்துக்கொள்வோம். ஆனால் நீங்கள் உங்களைச் சுய ஆராய்வு செய்து இத்தகைய இலக்கியங்களை இடை விடாது வாசிப்பதன் மூலம் நீங்கள் வருத்தம் தோய்ந்தவராக ஆகிக்கொண்டிருக்கிறீர்கள் என்று அறிந்தால், நீங்கள் எழுச்சியூட்டும் ஆன்மீகப் புத்தங்களைப்படிக்கும் ஒரு புதிய வழக்கத்தை ஏற்படுத்த விரும்புவீர்கள்.

இவ்வாறு செய்வதால் உங்கள் வாழ்க்கை யின் திசையை மாற்றிக்கொள்வீர்கள். வலுவான தீர்மானத்தின் மூலமாக நாம் நம்மை விரைவாக மாற்றிக்கொள்ளமுடியும். ஆனால் அது இல்லையேல், வருடக்கணக்கில் ஏற்படுத்தப்பட்ட பழக்க முறைகளை ஒருவர் முயற்சியின்றியோ அல்லது ஒரு நிமிடத்திலோ மாற்றிவிட முடியாது.

வெகு நாட்களாக நிலைபெற்றுள்ள ஒரு பழக்கத்தை ஒழிப்பதற்கு அத்தீய பழக்கம் நலி வுறும்வரை, உங்கள் தீர்மானத்தின் முழுமையான சக்தியையும் அதற்கு எதிர்மாறான செயலில் உபயோகிக்க வேண்டும். அநேகருக்குத் தேவை யான அளவு பொறுமை இல்லை. ஆனாலும் ஒவ்வொருவரும் பின்வரும் உண்மையால் உற் சாகம் பெற வேண்டும். நீங்கள் எதை உருவாக்கி அல்லது செய்து இருந்தாலும் அதை மாற்ற உங்களால் முடியும்.”

“நீங்கள் உங்களை எப்படிப்பட்டவர் என்றும் ஆராய்வு செய்யும்பொழுது, உங்கள் பலவீனங்களை அகற்றிக்கொள்வதற் கும், மேலும் நீங்கள் எப்படியாக இருக்க வேண்டுமோ அப்படி உங்களை ஆக்கிக்கொள்வதற்கும் ஒரு திடமான விருப்பத்தைப் பெற்றிருங்கள், நேர்மையானசுய ஆராய்வு வழக்கமாக வெளிப்படுத்தும் உங்களுடைய குறைபாடுகளால் நீங்கள் அதை ரியப்பட்டு இடிந்துவிட இடம் கொடுக்காதீர்கள்.”

பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றையும் எண் ணம் உருவாக்குகிறது.

குருதேவர் கூறுகிறார்: “எண்ணம் என்பது நாளமில்லாச் சுரப்பிகளின் ஒரு வினைபொருள் என்ற கோட்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கருத்து ஆதாரமற்றது. தசையானது எண்ணத்தை உருவாக்க முடியாது.

பிண்டத்தையும் அண்டத்தையும் தீர்மானிப் பது மனமே. நீரானது குளிரவைத்தல் மற்றும் உறைவித்தல் மூலமாக பனிக்கட்டியாக மாறுவது போல், எண்ணமானது உறைதல் மூலம் ஸ்தூல வடிவத்தைக் கொள்கின்றது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் சடப்பொருள் வடிவத்திலுள்ள எண் ணமே! நாளமில்லாச் சுரப்பி உறுப்பானது ஒரு மிக நுண்ணிய எண்ண திட்ட வரைபடத்தின் ஒரு வெளி உருவக் கட்டமைப்பு மட்டுமே.”

“மனிதனுடைய உடல் மற்றும் மனத்தன்மைகள் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. செயலி ழந்த கல்லீரலை உடைய ஒருவர், சிடுசிடுப்பவராக ஆவதைப் பொதுவாகக் காணமுடிகிறது. பித்தக் கோளாறு உள்ள நிலையில் உங்களுக்கு, புன் சிரிப்புடன் அனைவருக்கும் ’சாந்தி’ எனக் கூறத்தோன்றாது! நீங்கள் சுமுகமாக இல் லாதவராக உணர்கிறீர்கள், உங்களுடைய உணர்ச்சிகளும் எண்ணங்களும் உங்கள் தேக நிலையால் பாதிக்கப்படுகின்றன.”

“தேக உறுப்புகளின்பலக் குறைவானது, அதற்கேற்ப மனோ சக்தியை பலவீனப்படுத்தும் விளைவைக் கொண்டுள்ளது. அதிக அளவில் மாமிசம் உண்போர்

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

பெரும்பாலும் முரட்டுத்தனம் உடையவர்களாகவும், எரிச்சல் மிகுந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஒருவாரகாலத்திற்கு நான் உங்களை திராட்சை சாறு பத்திய உணவில் வைத்திருப்பேனானால், நீங்கள் மன எழுச்சியை உணர்ந்து, எல்லோரிடமும் இசைவாக இருக்க நேரக்கூடும்.

குருதேவர் தன்னுடைய ஒரு நிகழ்வினைக் கூறுகிறார். "சமீபத்தில் மிகவும் குளிராக இருந்த பொழுது, கம்பளி, மேலங்கி இல்லாது வெறும் மெல்லிய ஆடையை மட்டுமே அணிந் திருந்த ஒருவரை நான் சந்தித்தேன். அவர் தனக்கு வயது எழுபது என்றும், குளிரை, தான் ஒருபோதும் உணர்வதில்லை என்றும் கூறினார்.

காலுறைகளைக்கூட அவர் அணிந்திருக்கவில்லை! அவர் குளிரான சீதோஷ்ணநிலைக்கு தனது தேகத்தைப் பழக்கப் படுத்திக் கொண்டிருந்தார். தேகம், மனதைப் பாதிப்பதை விட அதிகமாக மனம் தேகத்தைப் பாதிக்கின்றது. ஆயினும், தேகத்தின் இரசாயனப் பொருட்கள் மனதின்மீது ஓர் இடைவிடாத தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தேகமும் மனமும் ஒன்றை யொன்று சார்ந்துள்ளன."

குணங்கள் எவ்வாறு வருகிறது என்பதைப் பார்ப்போம்.

"மகாபாரதத்தில் ஒரு கதை வருகிறது. ஒரு நாள் திரௌபதி யுதிஷ்டிரரிடம் பின்வரு மாறு கேட்டார்.

"தாங்கள் ஒரு அடிகூடதர்மத்திற்கு விரோதமாக நடப்பதில்லை. தாங்கள் காட்டிலிருந்து சங்கடப் படுகிறீர்கள்.

துரியோதனனோ தர்மத்தைப் பற்றி சற்றுகூட எண்ணுவதில்லை. சுயநலம் கொண்டு திரிகிறான். அவன் அரசாளுகிறான். வசதியுடன் இருக்கிறான். சுகம் அனுபவிக்கிறான்

**எவன் சுகம் பெறும் நோக்கத்தோடு தர்மத்தைக் காக்கிறானோ அவன் தர்மத்தின் உண்மையை அறிய மாட்டான். அவன் மிருகத்தைப் போல சுக போகத்தில் ஆசைகொண்டு துக்கத்திற்கு அஞ்சுகிறான்.**



இது எப்படி? இதற்கு யுதிஷ்டிரர் பின்வருமாறு விடை இறுத்தார்: "எவன் சுகம் பெறும் நோக்கத்தோடு தர்மத்தைக் காக்கிறானோ அவன் தர்மத்தின் உண்மையை அறிய மாட்டான். அவன் மிருகத்தைப்போல சுக போகத்தில் ஆசைகொண்டு துக்கத்திற்கு அஞ்சுகிறான். அவன் தர்மத்தின் தத்துவத்தை எப்படி அறிவான்! மனிதனின் மனிதத் தன்மையே சுகமோ, துக்கமோ எதையும் கூறிக்கொள்ளாமல் சாஸ்திர விதிப்படி தன்னுடைய தர்மத்தை அதாவது கடமையைச் செய்து கொண்டே இருப்பதில்தான் இருக்கிறது."

மகாபாரதத்தில் விதுரர்திருதராஷ்டிரரிடம் கூறிய ஓர் அறிவுரையையும் இங்கு குறிப் பிட விரும்புகிறேன். அவர் கூறியதாவது:

"மனிதன் நிச்சயமாகத் தவிர்க்க வேண்டியது ஒன்று உண்டு என்றால், அது மனச் சோகம். சோகத்தினால் ஒருவனுடைய உடல் பாதிக்கப் படுகிறது. அதே சமயத்தில்ஒரு வன் அடையும் சோகம் அவனு டைய விரோதிகளுக்கு இன்பத்தைக் கொடுக்கிறது.

ஆகையால் சோகம் தவிர்க்கத் தக்கது. எல்லாமே நிலையற்றவை எனும்போது, ஒவ்வொன்றையும் நினைத்து வருந்துவது அறியாமையே. மனிதன் பிறக்கிறான், இறக்கிறான், மீண்டும் பிறக்கிறான். மனிதனுக்கு தோல்விகளும் நிறைவு குறைவுகளும் ஏற்படுகின்றன. சில சமயங்களில் பிறரிடம் அவன் உதவியை நாடுகிறான்;

வேறுசில சமயங்களில் மற்றவர்கள் இவனிடம் உதவியை எதிர்பார்க்கின்றனர். சில சமயங்களில் இவன் மனம் வருந்துகிறது. வேறு சில சமயங்களில் மற்றவர்கள் இவனை வருத்துகின்றனர் எதுவுமே என்றுமே சாஸ்வதமானவை அல்ல. மனத்தெளிவு படைத்த தீரன் இதை எதுவும் நினைத்து மகிழவும் மாட்டான். வருந்தவும் மாட்டான். அப்படிப்பட்டவனுக்கு சோகம் என்பது கிடையாது " இவ்வாறு விதுரர் கூறியுள்ளார்.

இதிலிருந்து என்ன தெரிந்துகொள்வதுஎன்றால் மனிதன், சமநிலையை உடைய மனநிலையைப் பெற்றிருந்தால் எப்பொழுதும் ஒரே நிலையில் வாழ இயலும். வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளை கணக்கில்கொள்ளக்கூடாது. இறைவன் மட்டும்தான் நமது இலக்கு என்பது குறியாக வைத்துக்கொள்வதே ஒவ்வொரு மனித னின் கடமையாகும்.

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம்
சரணம்வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேயோ
மோக்ஷயிஷ்யாமி மா சுக:

பகவான் அருளுகிறார்: "அர்ஜுனா, எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு என்னையே (சரணாகதவத்ஸலனான பகவானிடத்தில்) எவன் சரணடைகிறானோ அவனை எல்லா பாவங்களிலிருந்தும் நான் விடுவித்து விடுவேன். என்னை சரணடைபவர்கள் தேவன், முனிவர், குடும்பம், பிதுருக்கள் யாருக்குமே கடன்பட்டவனாக மாட்டான். சம்பூர்ண சரணாகதி என்பது எளிதான பணியன்று. அது மிகவும் கடினம். கர்மங்களும் ஸம்ஸ்காரங்களுமெல்லாம் அதற்கு மாறானதாகின்றன.

அவ்வாறு மாறுபட்ட தன்மையை தீர்ப்பதற்காகத்தான் சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஸம்பூர்ண சரணாகதிக்குரிய தகுதியும் ஸம்ஸ்காரமும் எல்லாம் அனுகூலமாக வந்த பின்னர் எந்த விதமான சாதனையின் அவசியமுமில்லை. அனைத்து தர்மங்களையும் விட்டு முழுமனதுடன் என் னை சரண்டையத்தான் வேண்டும். எல்லா துக்கங்களிலிருந்தும் அஞ்ஞானத்திலிருந்தும் பரம புருஷனான நான் மோட்சத்தை அருளுவேன். உத்தாரணம் செய்வது (மேல்நோக்கச் செய்வது) நான்தான், மாறாக சாதனைகளன்று. இறைவனிடத்தில் சரணாகதி அடைவதற்கான தகுதி கைவரப்பெறுவதற்காக மட்டும்தான் சாதனைகளைச் செய்வது என்பது பொருள். (பகவத் கீதை அத் 18 ஸ்லோகம் 66).

மேலே கூறிய நிலை ஒருவனுக்கு வரவேண்டுமென்றால், அவன் தன்னுடைய பாவங்களை உணரவேண்டும். அதன்பின்னர் அவன் எந்தப் பாவத்தையும் செய்ய முன்வரமாட்டான். அவ்வாறு ஒருவன் தன் பாவங்களை உணருவது எப்போதென்றால் தாம் செய்த பாவத்தை உணருவதற்கு முன்னர் வாழ்க்கையில் ஏராளமான சவுக்கடி அனுபவங்கள் ஏற்பட்டு அதன்பின்னர் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவிற்கு வருகிறான். எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் சுய ஆராய்வினால் பாவத்தின் தன்மையை உணரமுடியும் என்றும், அந்த நிலையை மாற்ற முடியும் என்றும் குருதேவர் ஆணித்தரமாகக் கூறுகிறார். அதன் பின்னர்தான் அவன் தன் பாவங்களை உணரத்தொடங்குகிறான். பின்னர் அவன் அவ்வப்போது இறைவனை நினைக்கத் தொடங்குகிறான்.

பின்னர் அச்செயலை அடிக்கடி செய்கிறான்; அதை இடைவிடாது செய்கிறான். அவ்வாறான செயல் அவனை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும். அத்துடன் அவன் எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் அவன் பெரிய சண்டாளனாக இருந்தாலும் அவன் தன் நாவினால் இறைவனின் நாமத்தை உச்சரிக்கத் தொடங்குகிறான். அத்துடன் அவன் தன் வாழ்நாளில் இறைவனின் பக்கம்தான் அதிகநேரம் இருப்பதாக அவன் உணருவான்.

இந்த நிலை வந்ததும் அவன் இறைவனை உணரத்தொடங்குகிறான். இறைவனும் அவனுக்கு ஆறுதல் அளிக்கத் தொடங்குகிறான். பின் னர் அவனுடன் இறைவன் இருப்பதை உணரத்தொடங்குகிறான். இவ்வாறு நாட்கள் செல்லச்செல்ல உலகம் மற்றும் உலகப்பொருட்கள் சம்பந்தப்பட்ட எண்ணங்கள் அவளைவிட்டுப் போய்விடும். அவன் இதயத்துள் இறைவனுக்காக ஆலயம் கட்டி அங்கே அவன் இறைவனை குடியிருத்தி அவன் பாதங்களில் சரணாகதி அடைந்தவாறு வாழுவான். பின்னர் அவன் இறைவனுக்காக மட்டும் வாழுவான். இது தான் முழு கரணாகதி என்பதன் பொருள். இந்த உலகம் தமக்கு எந்த வகையிலும் பொறுப்பாகாது என்பதை நன்கு உளமாற உணருகிறான். தம்முடன் எப்பொழுதும் இறைவன் மட்டும்தான் உடனிருந்து வழிநடத்துவது மட்டுமின்றி இறைவன் தன்னை ஸம்ஸாரமாகின்ற பெருங்கடலிலிருந்து இறைவனாகின்ற கரைக்கு சேர்த்துவிடுவான் என்ற உண்மையை அவன் புரிந்துகொள்ளுகிறான். பின்னர் அவனுக்கு பேரானந்தம்தான்! பேரானந்தப் பெருவெள்ளத்தின் அலை எப்பொழுதும் அவன் மேல் அடித்துக்கொண்டேயிருப்பதையும் அவன் உணருவான்!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# மாறுவான் மாறமாட்டான் மனிதன்

❖ மாறுவான், மாறமாட்டான் என்பதே மனிதனின் குணம். இது தானாக நிகழும். இல்லையேல் நாம் ஒருவனை மாற்ற முயல வேண்டும். செய்தாலும் இந்த வழி மிகவும் கடினம். முதலில் பலன் கிடைக்கும். மீண்டும் பழைய நிலைக்கே போய்விடுவான் மனிதன் இது தான் மண்ணின் விதி. இதையே விதி என்க.

❖ உதாரணத்தால் இதை விளக்குகிறேன். களிமண் கொண்டு செய்து சூளையிட்டு வெளியில் எடுத்த மண்பாத்திரம். இதை மாற்ற முடியாது. சூளையிட்ட பாத்திரத்தை மீண்டும் கணிமண் ஆக்க முடியாது. மீண்டும் உறுதியாக மாற்ற நினைத்தால் அப்பாத்திரம் சுக்குநூறாகிவிடும். இது போல பிறவியோடு தோன்றிய ஒவ்வொரு மனிதனின் குணத்தையும் வேறு குணத்தவனாக ஆக்கமுடியாது, மாற்றமுடியாது.

❖ சீனக்களிமண் என்பது வெள்ளைக்களிமண். இதனால் செய்ததே கோப்பையும், தட்டும். கப் அண்ட் சாசர் எனப்படும். இதை உடைத்துப் பொடியாக்கி களிமண் பானையாக்க முடியாது. அது போல சட்டிப்பானையை உடைத்து அப்பொடியின் கூறுகளால் வெள்ளைக்களிமண் கோப்பைகளை செய்ய முடியாது. இப்படி குணங்களை போதித்து மாற்றவேமுடியாது என்பதனால் அவரவர்களின் குணப்படியே அவரவர்கள் இருப்பார்கள். இதுவே பிறப்பின் ரகசியம். இதனால் நம் இஷ்டப்படி அனைவரையும் நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும், மேதைகளாகவும், அறிவாளிகளாகவும், ஞானிகளாகவும், முட்டாளாகவும், பக்தர்களாகவும் எந்த ஒரு உத்தியைக் கொண்டும் மாற்றமுடியாது. இதை உணராமல் இன்றைய உலகம் இருக்கிறது என்கிறார் ஞானிகள்.

❖ மண், ஒளி, சக்தி, எர்த், லைட் மற்றும் எனர்ஜி. இதுவே உயிர்கள் என அறிந்துகொண்டிருக்கின்றேன். வடிவம், குணம், பிறப்பு பிறகே. டிசைன், தன்மை(குவாலிடி) தரம் மற்றும் பிறப்பு என அறி. இது ஞானி பிரும்மேந்திரர் கண்டுபிடித்த தத்துவம். மேலுலகம், கீழுலகம் இவைகளை இதனோடு சேர்த்து அலசிக்கொள்.



❖ சூளை யிட்ட மண்பானையை விரலினால் தட்டினால் ஒரு ஒலி கேட்கும். இது மண்ணொலி. பீங்கான் கோப்பைகளைத் தட்டினால் சற்று வித்தியாசனமான ஒலி கேட்கும். இப்படியே உலோகங்கள், கம்பிகள், ஒலிகளெல்லாம் ஒன்றே என்று பேசினாலும் வித்தியாச வித்தியாசமாக கேட்கின்றன. இப்படியே மனிதர்கள்.

❖ சிந்தனை வேறுபாடுகள் சிந்திக்கின்ற தன்மையின் வேறுபாடுகள், உணருகின்ற உணர்த்துகின்ற உணர்த்தப்படுகின்ற அறிவு நிலை, பக்த நிலை, யோக நிலை, ஞான நிலை, படைப்பு நிலை இவைகள் அனைத்தின் உயர்வு தாழ்வுகளும், வேறுபாடுகளும், மாறுபாடுகளும், உன்னதங்களும், முழுமைகளும், குறைவுகளும், எளிமைகளும், வலிமைகளும் உயிருக்கு சொந்தமானதல்ல. இது ஆண்டவனுக்கும் சொந்தமானதல்ல. பிறப்புகளுக்கு மட்டுமே சொந்தம். இவைகள் ஒவ்வொரு வர்க்கத்தின் வழியாக விதவிதமாக பிறந்து வருகின்றன. இவைகளை மின்சார பல்புகளை ஒளிரச் செய்வதைப் போன்று உயிர் என்கின்ற ஆண்டவன் பிறக்கும்பொழுது கர்ப்பத்திற்குள் வந்து ஒவ்வொருவரின் தனித்தன்மைகளைப் பிரகாசிக்கச் செய்கிறான். இதுவே கர்ப்ப வேதாந்தம் என்கிறார் சதாசிவபிரும்மேந்திரர்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்







# அழகரை காக்கும் 18ம் படி கருப்பு

சித்திரைத் திருவிழா என்றதும் நம் நினைவுக்கு வருபவர் கள்ளழகர்தான். அழகர் கோயில் வைணவ சம்பிரதாயத்தில் மிகவும் முக்கியமான தலம். 'ஆக்னேய புராணம்', 'ஹாலாஸ்ய (மதுரை) மஹாத்மியம் போன்ற பல்வேறு புராணங்களிலும், இந்தத் தலத்தின் கதையை அறிந்துகொள்ள முடியும். அதில் மகிமை சொல்லப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள், 123 பாசுரங்களில் இந்தத் தலத்தின் மகிமையைப் பாடியிருக்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தில், முக்திதரும் இந்தத் தல மகிமைகள் குறித்து கவுந்தியடிகள், கோவலன் கண்ணகிக்கு எடுத்துக் கூறுகிறார். பிற்கால இலக்கியங்களான, 'அழகர் கலம்பகம்', 'அழகர் அந்தாதி', 'அழகர் கிள்ளை விடுதூது', 'சோலைமலைக் குறவஞ்சி' ஆகிய நூல்கள் அழகர் கோயிலின் சிறப்பைப் போற்றுகின்றன. இத்தனை சிறப்புகளை உடைய அழகர் கோயில், ஒரு வைணவத் தலம் மட்டுமன்று. அது, பதினெட்டாம்படிக் கருப்பன், விநாயகர் வழிபாடு, பைரவர் வழிபாடு என்று பல்வகையான வழிபாடுகளையும் தன்னுள் அடக்கி, அனைத்துத் தரப்பு மக்களும் வந்து தொழும், பண்பாட்டுப் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

அழகர் கோயில் மூலவருக்கு 'பரமஸ்வாமி' என்று பெயர். நின்றகோலத்தில் எழிலுற ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கும் இந்த இறைவனின் உற்சவருக்கே 'அழகர்' என்று பெயர். வடமொழியில் 'சுந்தரராஜன்.' பெயரில் மட்டுமல்ல, அவரின் தோற்றமும் கொள்ளை அழகு. உலகில் இவர் அழகுக்கு நிகரான உற்சவ மூர்த்திகள் இல்லை என்பது அனைவரின் கருத்து. அதனால்தான் அதைக் கவர்ந்துபோக நினைத்தான் மலையாள தேசத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவன்.

ஆனால், பாதுகாப்பான கோட்டையிலிருந்து அழகரைக் கவர்ந்து வருவதென்பது இயலாத ஒன்றாக இருந்தது. எனவே, அந்தப் பணியை 18 மந்திரவாதிகளிடம் ஒப்படைத்தான். அவர்கள் அழகரைக் கவர்வதற்குமுன் அவரின் சக்தியை வேறு இடத்துக்கு மாற்றும் முயற்சியில் இறங்கினர். ஆலயத்துக்குள் மறைந்திருந்து மந்திரம் ஜபிக்க, ஒரு மந்திர மையைப் பயன்படுத்தினர். அந்த மையைக் கண்களின் இமைகளில் பூசிக்கொள்ள அவர்கள் உருவம் மறைந்துவிடும். அப்படித் தந்திரமாக மறைந்திருந்து அழகரின் மூர்த்தத்தில் இருந்த சக்தியை களவாட முயன்றனர்.

கயவர்களின் திட்டத்தை முறியடிக்கத் திருவுள்ளம் கொண்ட பெருமாள், கோயில் பட்டர் ஒருவரின் கனவில் தோன்றி மந்திரவாதிகள் குறித்து எச்சரித்து மறைந்தார். கண்விழித்த பட்டரோ, மந்திரவாதிகளைப் பிடிக்க ஓர் உபாயம் செய்தார். மறுநாள் காலை நிவேதனத்துக்கு வழக்கமாகச் செய்யும் பொங்கலில் அளவுக்கு அதிகமாக மிளகு சேர்த்து ஆலயம் முழுவதும் உருட்டி வைத்தார். பொங்கலின் வாசனையால் ஈர்க்கப்பட்ட மந்திரவாதிகள், அதை எடுத்துத் தின்றனர்.

அடுத்த கணம், அதிகமாகச் சேர்க்கப்பட்டிருந்த மிளகினால் உண்டான காரம் தாங்காமல் கண்ணீர் விட்டனர். கண்ணீரில், கண் இமைகளில் இட்டிருந்த மை அழிந்தது. மை அழிந்ததும், அவர்களின் மாய சக்தி மறைந்து அவர்களின் உருவமும் வெளிப்பட்டது. உடனே, அங்கிருந்த காவலர்கள், அவர்களைப் பிடித்துக் கொன்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் ஒரு படிக்கட்டில் புதைத்தனர். மந்திரவாதிகளுக்குத் துணையாக வந்த காவல் தெய்வத்தையும் மந்திர சக்தியால் பிடித்துக் கட்டினர்.

அந்தத் தெய்வமோ, அழகரின் அழகில் மயங்கி, தான் இனி இங்கிருந்து அழகருக்குக் காவல் செய்வதாகச் சொல்லியது. அதற்குக் கூலியாகத் தினமும், அழகருக்குச் செய்யப்படும் அர்த்தஜாம நிர்மால்ய நிவேதனங்களைத் தனக்கு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. அதற்கு எல்லோரும் சம்மதிக்க இன்றளவும் பதினெட்டாம்படிக் கருப்பாக இருந்து அழகரைப் பாதுகாக்கிறது.

ஆலயத்தின் சொத்துகள் முழுமைக்கும் அவர்தான் காவல். 'அரங்கன் சொத்து, அழகர் அங்கவடிவுக்கும் காணாது'என்ற ஒரு சொலவடை உண்டு. அந்த அளவுக்கு அழகருக்கு ஆபரணங்கள் உண்டாம். திருவிழாவுக்காக அழகர் வெளியே செல்லும்போது பதினெட்டாம்படிக் கருப்பனிடம், அவர் என்னென்ன நகைகள் அணிந்து செல்கிறார் என்று பட்டியல் வாசித்துக் காண்பித்துச் செல்ல வேண்டும். அதேபோல திரும்பும்போதும், அதே



நகைகள் வந்திருக்கின்றனவா என்பதையும் உறுதிசெய்தே உள்ளே செல்ல வேண்டும்.

இன்றும், ஆலயம் மூடியதும் சாவியைப் பதினெட்டாம்படிக் கருப்பின் சந்நிதியில் கொண்டு வந்து வைக்கும் வழக்கம் உள்ளது.

பதினெட்டாம்படியின் வாசலாக இருக்கும் கருப்பனுக்கென்று உருவம் இங்கு இல்லை. பெரும் கதவே கருப்பனின் வடிவாக வணங்கப்படுகிறது.

எப்போதும் மூடியே இருக்கும் இந்தக் கதவு, பிரம்மோற்சவத்தில் சக்கரத்தாழ்வார் எழுந் தருளலுக்காக மட்டுமே திறக்கப்படும். மூடியிருக்கும் கதவுக்கே இங்கு பூஜைகள் நடைபெறுகின்றன.

பதினெட்டாம்படிக் கருப்பின் காவலைத் தாண்டி எதுவும் உள்ளே செல்ல இயலாது. தினமும் நூபுர கங்கையில் இருந்து அழகருக்குக் கொண்டுவரப்படும் தீர்த்தத்தைக் கருப்பனின் சந்நிதியில் வைத்து, அது தூய்மையாகக் கொண்டுவரப்பட்டது என்று பிரமாணம் செய்தபின்னே உள்ளே கொண்டு செல்ல இயலும். கருப்பனிடம் செய்யும் பிரமாணம் நீதி தேவன் சந்நிதியில் செய்யும் பிரமாணத்துக்கு இணையானது.

சுற்றுப்பட்டு ஊர்களில் இருப்பவர்கள், தங்களுக்குள் எழும் பிரச்னைகள் பலவற்றுக்கும் கருப்பன் சந்நிதியில் பிரமாணம் சொல்லித் தீர்க்கிறார்கள். கருப்பன் சந்நிதியில் பொய் சொன்னால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பது நம்பிக்கை.

அழகர் கோயிலின் மற்றொரு சிறப்பு, அங்கு இருக்கும் சைவம் சார்ந்த இறைவழிபாடு. 'திருப்பதிகளுக்கெல்லாம் முதன்மை திருமாலிருஞ்சோலை' என்று பெயர்பெற்ற அழகர் கோயிலில் விநாயகர் சந்நிதியும் பைரவர் சந்நிதியும் காணப்படுகின்றன.

இரு சந்நிதிகளிலும் விபூதிப் பிரசாதம் வழங்கப்படுகிறது. வீர சைவரான, லிங்காயத்து ஒருவரின் பெரிய சிலை ஒன்றும் ஆலயத்துள் காணப்படுகிறது. அந்த அளவுக்குச் சைவ வைணவ வேறுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களாலும் ஆதரிக்கப்பட்டத் தலமாக அழகர்மலை இருந்துவந்துள்ளது.

இந்த ஆலயத்தில் பஞ்சபூதங்களை மையமிட்ட பண்டிகைகள் விசேஷமாகக் கொண்டாடப்படும். பிருதிவி (மண்) நாளாகிய விநாயகர் சதுர்த்தியும், அப்பு (நீர்) நாளாகிய பதினெட்டாம் பெருக்கும், தேஜஸ் (அக்னி) நாளாகிய கார்த்திகை தீபமும், வாயு (காற்று) நாளாகிய சரஸ்வதி பூஜையும், ஆகாச நாளான மகரசங்கராந்தியும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படும்.

இந்தத் தலத் தீர்த்தங்களின் அதி தேவதையான ராக்காயி அம்மனுக்கு அமாவாசையன்றும், பதினெட்டாம்படிக் கருப்புக்கு பௌர்ணமியன்றும் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

சித்திரைத் திருவிழாவில் அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் மிகவும் புகழ்பெற்றது. அழகர் மலையிலிருந்து மதுரை செல்லும் வழியில் 400க்கும் அதிகமான மண்டகப்படிகள் நடைபெறும். சித்திரைத் திருவிழாவுக்கான பந்தக்கால் அனைத்து மண்டகப்படிகளிலும் ஊன்றும் விழா நடைபெறும்.

www.aanmeegamalar.com



# ஸ்ரீரங்கம் கோவில் இருக்கும் ஐந்து குழியின் ரகசியம்

ஸ்ரீரங்கம் கோவில் தாயார்சந்நதிக்கு வெளியே இருக்கும் ஐந்து குழி மூன்றுவாசல் பற்றிய விளக்கம்

பலர் இந்த இடத்தில் தாயார் தன் ஐந்து விரல்களை வைத்து பெருமாள் தாயார் சன்னதி நோக்கி எழுந்தருள்வதை ஆவலுடன் பார்கிறாள் என கூறுவது வழக்கம்.

ஆனால் இந்த இடத்தின் தாத்பர்யம் வேறு:

1. ஸ்ரீரங்கம் தாயார் படி தாண்டாப் பத்தினி. எனவே வெளியே வந்துபார்த்திருக்கச் சாத்தியமில்லை.

2. பெருமாள் இவ்வழியில் தாயார் சன்னதிக்கு வருவது வழக்கம் இல்லை. ஒருநாள் மட்டுமே இந்த வழியாக எழுந்தருள்வார். மற்ற நேரங்களில் ஆழ்வான் திருசுற்று (5வது பிரகாரம்) வழியாகத்தான் எழுந்தருள்வார்.

இந்த ஐந்து குழி அர்த்தபஞ்சக ஞானத்தைக் குறிப்பதாகும். மூன்று வாசல் தத்வத்ரயத்தைக் குறிப்பதாகும்.

தத்வத்ரயம் என்பது சித், அசித், ஈஸ்வர தத்துவம். அர்த்தபஞ்சகம் என்பது

1. அடையப்படும் பிரம்மம்
2. அடையும் ஜீவன்
3. அடையும் வழி
4. அடைவதால் ஏற்படும் பயன்
5. அடைவதற்கு உள்ள தடைகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

இந்த ஐந்து குழிகளில் ஐந்துவிரல்களை வைத்துத் தெற்குப் பக்கம் பார்த்தால் பரமபதவாசல் தெரியும்.

ஒரு ஜீவாத்மா, பரமாத்மாவை இந்தத் தத்துவங்களைக் கொண்டு அடைந்தால் அந்த ஜீவாத்மாவுக்குப் பரமபதம் நிச்சயம் என்பதுதான் இதன் பொருள்.



# கோடை களைப்பு போக்கும் பானகம்

கோடைகாலத்தில் ஏற்படும் களைப்பை விரட்டும் பானம் பானகம்!!!!

பழரசத்தை விடவெயிலுகந்தது பானகம் தான்... கால்சியம்+இரும்புச்சத்து +விட்டமின்கள் + எனர்ஜி = பானகம்

வெயிலுக்கு பானகம் அருந்தும் போது instant energy கிடைக்கிறது நடைப்பயணம் போகும் போது கழைப்பாக வீடு வந்தடையும், போது நாம் அருந்தும் பானகமானது உடலுக்கு தேவையான கால்சியத்தை சுக்கிலிருந்தும், இரும்புச்சத்தை அமினோ அமிலங்களை பனைவெல்லத் திலிருந் தும், ஏலக்காயிலிருந்து உணவு குழாயில் ஏற் படும் தொற்றுகளையும் செரிமானத்தை சரி செய் வதும்,

எலுமிச்சம்பழத்திலுள்ள சிட்ரிக் அமிலம் உட லின் நிலைதன்மையை உருவாக்குவதும் அதை பற்றி தரவுகள் அனைவருக்கும் தெரிந்ததே,



புளியிலிருக்கும் விட்டமின் சி யானது பனைவெல்லத்துடன் வினை புரிந்துஉடனடி எனர்ஜியாக உடலுக்கு அளிக்கிறது அதுமட்டு மல்ல, சுக்கு உடலுக்கு மிக சிறந்த வினையூக்கி.

வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு நமது மரபை போற்றும் பானகத்தை கொடுக்க முயல் வோம் அதன் மூலம் வெப்பத்தால் உருவாகும் நோய் தொற்றுக்களை தவிர்ப்போம்...

இதன் மூலம் உடலுக்கு நோய்களை உற்பத்தி செய்யும் பன்னாட்டு கம்பெனிகளின் குளிர் பானங்களை தவிர்க்கவே முயல்வோம்.

## பானகத்திற்கான தேவையான பொருட்கள்:

- ❖ புளி சிறிய எலுமிச்சை அளவிலான உருண்டை
- ❖ பனைவெல்லம் அல்லது வெல்லம் 2 டேபிள் ஸ்பூன்
- ❖ ஏலக்காய் பொடி ¼ டீ ஸ்பூன்
- ❖ சுக்குப்பொடி ¼ டீ ஸ்பூன்
- ❖ மிளகுத்தூள் ¼ டீ ஸ்பூன்
- ❖ தண்ணீர் 2 கப்

## செய்முறை:

1. வெல்லத்தைதட்டி பொடியாக்கிக்கொள்ளவும். புளியை 2 கப் தண்ணீரில் நன்கு கரைக்க வும்.
2. கரைத்த புளிநீரில் வெல்லத்தை சேர்க்கவும். வெல்லம் முழுவதுமாக கரையும்படி ஸ்பூன் கொண்டு கலக்கிவிடவும். வெல்லம் முழுமை யாக கரைந்தபின் வடிகட்டியால் இறுக்கவும்.
3. இதனுடன் ஏலக்காய்பொடி, சுக்குப்பொடி, மிளகுத்தூள் சேர்த்து கலக்கவும். இதை அப்படியே அல்லது சிறிது நேரம் மண் பானையில் வைத்திருந்து பருகவும்.
4. மிளகு மற்றும் சுக்கு தொண்டை பிடிப்பை குணமாக்கும் நல்ல மருந்து. சளியையும் குணப்படுத்தும். கோடையில் வெயிலினால் ஏற்படும் உடல் உஷ்ணத்தையும், களைப் பையும் பானகம் பருகி விரட்டுங்கள்!





# சோறு கண்ட இடம் சொர்க்கம்

‘அன்னம் பரபிரம்ம சொரூபம்’ என்று சொல்வது மரபு. அதாவது, அன்னம் வேறு; ஆண்டவன் வேறல்ல. இரண்டும் ஒன்று தான் இதையே நாட்டுப்புறங்களில் ‘சோத்துக்குள்ளே இருக்கிறார் சொக்கநாதர்’ என்றும் குறிப்பிடுவர்.

சிவபெருமானுக்கு, ஐப்பசிமாதம் பவுர்ண மியன்று அன்னத்தால் அபிஷேகம் செய்கிறார்கள். தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலிலுள்ள பெரிய லிங்கத்திற்கு அன்னாபிஷேகம் நடப்பதைக் காண ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள்.

அன்னம் இட்ட கை சின்னம் கெட்டுப் போகாது. ஒருவர் செய்த அன்னதான புண்ணிய பலன் பல பிறவிகளுக்கும் தொடரும் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. அன்னம் அரியிலிருந்து தயாராகிறது.

‘அரிசி’ என்ற சொல்லில் இருவித மந்திரங்கள் சேர்ந்துள்ளன.

‘அரி’ என்பதை விஷ்ணு என்றும், சிங்கம் என்றும் கூறலாம். பிரகலாதனைக் காப்பதற்காக பெருமாள் எடுத்த அவசரத்திருக்கோலம் சிங்க முகத்துடன் கூடிய நரசிம்ம அவதாரம்.

‘சி’என்பது சிவ பெருமானைக் குறிக்கும். மகான்களுக்கு மட்டும் ‘சி’ என்ற மந்திரம் சொல்லி சிவனை வழிபட உரிமை இருக்கிறது.

‘சோறு கண்ட இடம் சொர்க்கம்’ என்று சாப்பாட்டு ராமன்களுக்கு உதாரணம் காட்டி சொல்வார்கள். உண்மையில், சோரில் அபிஷேகம் நடக்கும் சிவலிங்கத்தை தரிசிப்பவர்களுக்கு சொர்க்கம் கிடைக்கும் என்பதையே இப்படி குறிப்பிட்டனர்.

# பழனி முருகன் தோன்றிய வரலாறு



பிரம்மாவின் மனதில் இருந்து பிறந்தவர் சனத்குமாரர். பிரம்மஞானியான இவரைக் காண சிவபார்வதி வந்தனர். ஆனால், அவர்களை அவர் கண்டு கொள்ளாமல் அமர்ந்திருந்தார்.

தெய்வத்தைக் கோயிலில் பார்த்தாலே, அது வேண்டும், இது வேண்டும் என கேட்பது உலக வழக்கம். ஆனால், தெய்வம் நேரில் வந்தும் சனத்குமாரர் ஏதும் கேட்கவில்லை. இதனால் மகிழ்ந்த சிவன், "உன் பற்றற்ற நிலையைப் பாராட்டி வரம் தருகிறேன், கேள், என்றார்.

சனத்குமாரரோ தனக்கு எதுவுமேதேவையில்லை என்று சொல்லிவிட்டார். சில ஞானிகள் "பிறவாவரம் கொடுங்கள், என்றாவது தன் ஆசையை வெளிப்படுத்துவார்கள். சனத்குமாரர் அதைக்கூட கேட்க விரும்பவில்லை. வியந்து போன சிவன் அவரிடம், ""நீ என்னிடம் வரம் கேட்காவிட்டால் பரவாயில்லை. நான் உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன். நீயே எனக்கு மகனாகப் பிறக்கவேண்டும், என்றார். சனத்குமாரரும் ஒப்புக்கொண்டார். ஆண்டிச்சாமியாக இருந்த சனத்குமாரர், அடுத்த பிறவியில் சிவனுக்கு மகனாகப் பிறந்து, ஆண்டிக்கோலம் பூண்டு பழநி சென்றார்.



# நம் உடலில் வாசம் செய்யும் சித்த அஷ்ட லஷ்மி (ரகசியம்) தெரியுமா?



## நம் பாதங்களில் வசிப்பவள் ஆதிலஷ்மி

நம் பாதம் பிறர் மீது தெரியாமல் பட்டால் சிவ சிவ எனக் கூறி மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிடில் ஆதிலஷ்மி நம்மை விட்டு விலகி விடுவாள்.

## நம் முழங்கால் பகுதியில் வசிப்பவள் கஜலஷ்மி

காலை நீட்டியபடி புத்தகம் படிப்பதாலும் நெல் அரிசி இவைகளை கால்களால் மிதிப்பதாலும் நம்மை விட்டு கஜலட்சுமி விலகுகிறாள்..!!

## நம் இடுப்புக்கு கீழ் பகுதியில் வீர்யலஷ்மி..! வசிக்கிறாள்

பிறரை நித்திப்பதன் மூலம் சாபம் பெறுபவர்களை விட்டு இந்த *வீர்யலஷ்மி* விலகுகிறாள்.

## நம் இடது தொடையில் வசிப்பவள் விஜயலஷ்மி

இடது தொடை எப்போதும் மனைவிக்குச் சொந்தம். எனவே மனைவியை விடுத்து பிறன்மனை நோக்கினால் இந்த விஜயலக்ஷ்மி விலகி விடுவாள்!

## வலது தொடையில் வசிப்பவள் சந்தானலஷ்மி

பெற்றோர்கள் கன்னிகாதானம் செய்யும்போது பெண்ணை வலது தொடையில் அமர வைக்க வேண்டும்.

இடது தொடையிலோ .. இரு தொடைகள் இடையே அமர வைத்தால் இந்த *சந்தானலஷ்மி* விலகி விடுவாள்...!!

## நமது வயிற்றுப் பகுதியில் வசிப்பவள் தான்யலஷ்மி

எச்சில் உணவு... ஊசிப் போன உணவு இவைகளை ஏழைக் களுக்கோ .. பிறருக்கோ கொடுத்தால் *தான்ய லட்சுமி* விலகி விடுவாள்.

## நமது நெஞ்சுப் பகுதியில் வசிப்பவள் தைரியலஷ்மி

நெஞ்சிலே நஞ்சை வைத்து பிறரைக் குறை கூறி குடும்பத்தை கொடுப்பவர்களை விட்டு *தைரிய லட்சுமி* விலகுகிறாள்.

## நமது கழுத்துப் பகுதியில் வசிப்பவள் வித்யாலஷ்மி

கழுத்தில் ஒரு ருத்ராட்சம் அணியாதவனும் குடும்ப பராம்பரிய சின்னத்தை அணியாதவர்களை விட்டு *வித்யா லட்சுமி* விலகுகிறாள்.

## நம் நெற்றியின் மத்தியில் வசிப்பவள் சௌபாக்யலஷ்மி

இவள் நம் புருவத்தை சிரைப்பதாலும் மஞ்சள் கலந்த குங்குமம் விட்டு ஸ்டிக்கர் பொட்டு வைப்பதாலும், வகிட்டில் குங்குமம் வைக்காமல் இருப்பதாலும் வீபூதி. நாமம்.. அணியா விட்டாலும் நம்மை விட்டு சௌபாக்ய லட்சுமி விலகுகிறாள்..

பல தவறுகள் செய்து நம் அங்கத்தில் இருக்கும் லஷ்மி களை விரட்டி விட்டால் நாம் எப்படி செழிப்பாக வாழ முடியும்?



www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com

# சாய்பாபா ஆன வரலாறு

## பாபா என்ற பெயர்

பாபா... சாய்பாபா ஆனது எப்படி தெரியுமா?

சீரடி சாய்பாபாவிடம் எத்தனையோ பக்தர்கள் நெருக்கமாக இருந்தார்கள். ஆனால் பாபாவிடம் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் இருந்த ஒரே பக்தர் மகல்சாபதி. சாய்பாபா மகல்சாபதி இவர்களின் இருவரது வாழ்க்கையும் இரண்டற கலந்து இருந்தது.

இன்று உலகத்தில் இருக்கும் கோடிக்கணக்கான பக்தர்கள் சீரடி சாய்பாபாவின் அதிசயத்தை உணர்ந்து அவரை பூஜை செய்து வழிபாடு செய்கிறார்கள் என்றால், அதற்கு மூலகாரணமாக இருந்தவர் மகல்சாபதி. சீரடிக்கு வந்த இளம் பாபா பெயரை 'சாய்பாபா" என்று மாற்றிய பெருமை மாமனிதரான இந்த மகல்சாபதிக்கே சேரும்.

மேலும், சாய்பாபா என்ற மந்திர சொல்லில் பக்தர்கள் மயங்கிக் கிடப்பதற்கான காரணமும் இவரேதான். சீரடியில் சாய்பாபாவை நாற்பது வருடங்கள் பூஜித்து, ஆராதித்து, வழிபட்ட சிறப்பும் இவருக்கு உண்டு. சாய்பாபாவுக்கு அவர் வெறும் பக்தனாக மட்டுமல்லாமல், வேலைக்காரனாகவும் இருந்தார்.

யார் இந்த மகல்சாபதி?

மகல்சாபதிக்கு வசதி வாய்ப்பு கிடையாது. பரம ஏழை. ஆனால், நல்ல மனிதர். மனசாட்சிக்கு கட்டுப்பட்டு வாழக்கூடியவர்.

சீரடியில் உள்ள கண்டோபா கோவில், அவரது குலதெய்வமாகும். இந்த கோவிலில் குடிக்கொண்டிருக்கும் மூலவர் சிவனின் பெயர் மகல்சாபதி. இவருடைய பெற்றோர்கள் அந்த பெயரையே இவருக்கு வைத்திருந்தார்கள். அக்கோவிலின் பூசாரியாகவும் அவரே இருந்தார். பொற்கொல்லர் இனத்தைச் சேர்ந்த மகல்சாபதிக்கு குடும்பத் தொழில் ஏற்றதாக இல்லை. விவசாய நிலம் ஏழு ஏக்கர் இருந்தும் விளைச்சல் இல்லாததால் அதிலிருந்து அவருக்கு வருமானம் எதுவும் கிடைக்கவில்லை.

வறுமையில் வாடிய அவர் கண்டோபா ஆலயத்தில் வரும் வருவாயை மட்டுமே சார்ந்து இருந்தார். அந்த வருமானமும் கோவில் நிர்வாக செலவுகளுக்கு சென்றது. மகல்சாபதியின் வாழ்க்கை வறுமையில் சிக்கியது. மனைவி, 3 மகள்கள், 1 மகனை காப்பாற்ற அவர் கடும் போராட்டங்களை எதிர்கொண்டார். இந்த சூழ்நிலையில் தான் முதன் முதலில் இளம் பாபாவை சந்தித்தார்.

ஒரு வேப்ப மரத்தடியில் அமர்ந்திருந்த இளம் பாபாவின் செயல்பாடுகள் மகல்சாபதியை ஈர்த்தன. ஆனால் அவர் திடீரென மாயமாகிவிட்டார். பாபா மீண்டும் சீரடிக்கு திரும்பியபோது முதன் முதலில் மகல்சாபதிதான் அவரைப் பார்த்தார். மகிழ்ச்சி பொங்க அவர், 'ஆவோ சாய்" என்று அழைத்தார்.

அன்று அவர் அப்படி அழைத்த பெயரே பாபாவுடன் இணைந்து 'சாய்பாபா" என மாறி இன்றுவரை நிலைத்து கொண்டிருக்கிறது.



# முருகனின் பன்னிரு கரங்களின் பணி



முருகனின் பன்னிரு கரங்கள் செய்யும் பணிகள் என்னவென்று தெரியுமா? இரு கைகள் தேவரையும் முனிவரையும் காக்கிறது. மூன்றாவது கை அங்குசத்தைச் செலுத்துகிறது. மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் இருக்கிறது. ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச் சுழற்றுகின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு அருள்பொருளை உணர்த்துகிறது. எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது. ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கின்றது. பத்தாவது கை மணியை ஒலிக்கின்றது (அருளோசை). பதினோராவது கை மழையை அருள்கிறது. பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது.

# நெற்றிக்கண்



நெற்றிக்கண் என்று ஒன்று உண்டு என் பது இந்துக்களின் நம்பிக்கை. சிவனை முக்கண் ணன் என்று அழைத்துவணங்குவார்கள். நக்கீரரை சோதிப்பதற்காக வந்த சிவன் தனது நெற்றிக்கண்ணை திறந்தார் என்று நாம் அறிந் திருக்கிறோம்.

கடவுள் என்று ஒருவரே இல்லை என்றும், இந்து மதத்தில் கூறப்படுவது ஜஸ்ட் புராணக்கதை என்றும் கூறும் அறிவு ஜீவிகளுக்கு மத்தியில் வாழும் நாம் நெற்றிக்கண் என்று ஒன்று உண்டு என்று கூறினால் அதற்கும் ஏதாவது வாதம் வைப்பார்கள்.

ஆனால் இந்துமதம் பகுத்தறி வுள்ள விஞ்ஞானத்துடன் இணைத்த மதம். அதன் சிறப்பை மெல்ல மெல்ல இப்போதுதான் சில மேற்கத்திய விஞ்ஞானிகள் கண்டு பிடித்து நமது அறிவு ஜீவிகளுக்கு புரியவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோவில்கள் கட்டி வைத்ததற்கும், பரம் பொருள் ஒன்றே என்று கூறும் இந்துமதம் கடவுளை பல நாமங்களில் அவரவர் விருப்பப்படி வழிபட அனுமதிப்பதற்கும் மற்றும் அதன் சில கொள்கைகளுக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் பின்னால் பலமான காரணங்கள் உள்ளன.இதை விளங்கிக்கொள்ளும் அறிவு குறைவாக உள்ள காரணத்தால் அதை பொய் என்றோ மூட நம்பிக்கை என்றோ கூறக்கூடாது.

அதன் சில வழக்கங்களை சுயநலத்திற் காக சிலர் துஷ்பிரயோகம் செய்தால் அதற்கு மதம் பொறுப்பல்ல. எம்மதமானாலும் அன்பை யும் கடவுளை அடையும் வழியயும்தான் கூறும்.ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்கு மதங்களை பழிப்பது சரியல்ல.

இப்போது மூன்றாவது கண்ணை பற்றி பார்ப்போம்.

“த்ரியம்பகன்” என்பது சிவனின் திரு நாமங்களில் ஒன்று. இது மூன்றாவது கண்ணைக் குறிக்கும். மற்ற இரண்டு கண்களும் புறக் கண்கள். பார்வையில் படும் குப்பைகளையெல்லாம் அவை மூளைக்கு புகட்டிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலமாக யாரை யாவது பார்த்தால், பழைய அபிப்பிராயங்கள் உங்க ளுக்குள் புறப்படுகின்றன. இந்த இரண்டு கண்களும் உண்மையை பார்ப்பதில்லை. எனவே அறிதலுக்கென்றே சிவனின் மூன்றாவது கண் திறக்கிறது. அதுவே ஞானக்கண். இந்திய மரபில் அறிதல் என்பது படிப்பால் பெறுவதல்ல. புத்தகங்கள் தருவதல்ல. ஆழ்ந்த புரிதலையே அறிதல் என்கிறோம். இந்த மூன்றாவது கண் திறக்கிற போதுதான் சிவனை உணர்கிறீர்கள்.

படித்த மனிதர்கள் எல்லோருக்குமே ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்த கதை தெரியும். ஆப்பிள் பழம் கீழே விழுந்தது பற்றியே அனைவரும் பேசுகிறார்கள். ஆனால், செடியாக இருந்த அந்த ஆப்பிள் மரத்தை ஒரு சக்தி மேல் நோக்கி வளர்த்திருக்கிறதே அது குறித்து யாரும் பேசுவதில்லை.

ஆனால் இப்போது ஆய்வுகளின் மூலம் மனிதனுக்கு ஒரு மூன்றாவது கண் இருப்பதாகவும் அதன் மூலம் பல அற்புதங்கள் நிகழ்த்தமுடியும் என்றும் தெரியவருகிறது. இந்த மூன்றாவது கண் பெயர் பினியல் சுரப்பி. (Pineal Gland).

பிரெஞ்சு அறிவியல் நிபுணரான Rene Descartes (René Descartes was a French philosopher, mathematician and writer who spent most of his life in the Dutch Republic (1596-1650) இதனை ஆன்மாவின் இருக்கை என குறிப்பிடுகிறார். இது இந்துக்களின் ஆக்ஞா சக்கரத்துடன் (நெற்றி சக்கரம்) தொடர்புடையது. சிவபெருமானின் நெற்றிக்கண் எந்த வடிவில் எப்படி காணப்படுகிறதோ அதே மாதிரி இதுவும் அமைந்துள்ளது.

இந்த பினியல் சுரப்பி ஒளியின் மூலம் தூண்டப்படுகிறது. இது மெலெண்டொனின் எனும் திரவத்தை சுரக்கிறது. இத்திரவம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.மன அழுத்தத்தை குறைக்கிறது.

நமது மதம் இந்த சுரப்பியை தூண்டு வதன் மூலம் ஞானம்/ பேரின்பம் அடையலாம் என கூறுகிறது. இந்த மூன்றாவது கண்ணை தூண்டுவதன்மூலம் முக்காலங்களை அர்யும் தன்மை, விழிப்புணர்வு, பல நல்ல சக்திகள் கிடைப்பதாக கூறப்படுகிறது.

குண்டலினி தியானம் மூலம் இந்த மூன்றா வது கண்ணை தூண்டலாம். நம் குருமார்கள் தீட்சயளிக்கும் பொருட்டு புருவ மத்தியில் ஆசீர்வாதம் செய்வது எத்தன பொருட்டு என்பது இப்போதாவது புரிகிறதா?

தகுந்த பயிற்சியுடனும் நம்பிக்கையுடனும் இந்த ஆக்ஞா சக்கரத்தை இயங்கச்செய்து அளவில்லா ஆனந்தத்தையும் சக்தியையும் பெறலாம். ஒருவர் தகுந்த பயிற்சி பெற்றால் நினைவுகளைக் குவித்து நெற்றிப் பொட்டின்ஊடாக வெளியேற்றி தீயை கூட வரவைக்கலாம். (சிவன் திரிபுரங்களை எரித்த கதை கேள்விப்பட்டிருப்பீர்கள்).

மனதிலுள்ள தீய எண்ணங்களை எரித்து நல்ல எண்ணங்களை வளர்க்கலாம் (சிவன் காமனை எரிந்தத கதையும் ஏன் முருகப்பெருமான் தோன்றிய கதையும் அனைவரும் அறிந்ததே)

இதை தகுந்தபயிற்சியிடன் எப்போதும் விழிப்பு நிலையில் வைத்திருந்தால் நாம் திறமை சாலிகளாக வாழலாம். அப்படி நாம் வாழக்கூடாது என்று நினைக்கும் சிலர்தான் இதயெல்லாம் போலி என்று கதைபரப்பினார்களோ தெரிய வில்லை. நம் முன்னோர்களின் நல்ல சிந்தனைகளையும் வழிகாட்டல்களையும் நமது அறிவீனத்தால் போலி என்று கேலி செய்து இழந்துவிட்டோம். இனியாவது விழிப்போம்.

"இந்துமதம் அர்த்தமுள்ளது. பொருள் பொதிந்தது"



# யமதர்மராஜனின் தர்மவழிப்படியான நீதிமுறை!

ஹிந்து தர்மத்தில் மறுபிறவி மற்றும் கர்மபல நியாயம் கூறப்பட்டுள்ளது. அதன்படி உங்களின் மரணத்திற்கு பின்பு உங்களின் லிங்கதேஹத்தின் (சூட்சுமதேஹத்தின்) பிரயாணம் மேற்கொண்டு நடக்கிறது. 84 லக்ஷ யோனிகளில் பிரயாணம் செய்த பின் மனிதப்பிறவி கிடைக்கிறது. அத்துடன் இப்பிறவியில் நீங்கள் இறைவனை அடைய முடியும்' எனவும் சொல்லப்படுகிறது. இதன்படி இறப்பிற்கு பின்னர் என்ன நடக்கிறது? இதைத் தெரிந்து கொள்ள அனைவரிடமும் ஆர்வம் உள்ளது. ஸனாதனின் சூட்சுமஞானம் கிடைக்கப்பெறும் ஸாதகர் குமாரி மதுரா போஸ்லே அவர்களுக்கு யமதர்ம ராஜனின் தர்மவழிப்படியான நியாயம் வழங்கும் செயல்முறை சம்பந்தமாக சூட்சும ஞானம் கிடைத்துள்ளது. அதை இங்கு வழங்குகிறோம். இதில் நல்லதீய கர்மாக்களின்படி மேற்கொண்டு கிடைக்கும் கதி பற்றியும் இங்கு கூறப்பட்டுள்ளது. லோகமான்ய திலகருக்கு ஆங்கிலேய நீதிபதி தண்டனை வழங்கியபோது அவர், 'நான் எந்தவித குற்றமும் செய்யவில்லை. இந்த நீதிமன்றத்தில் எனக்கு தண்டனை வழங்க தீர்ப்பு வழங்கப்பட்டாலும் இதைக் காட்டிலும் பெரிய நியாயம் வழங்கும் செயல்முறை இறைவனுடையது ஆகும். அங்கு எனக்கு சரியான நியாயம் வழங்கப்படும்', எனக் கூறி தர்மவழிப்படியான நம் நியாய செயல்முறையின் மீது தனக்குள்ள நம்பிக்கையைத் தெரிவித்தார்.

## பாவிகள் இறப்பிற்கு பின்னர் யமபுரிக்கு செல்லுதல்

பாவிகளின் இறப்பிற்குப் பின்னர் யம தூதர்கள் பாவிகளின் லிங்க தேஹங்களை தெற்கு திசை வழியாக எடுத்து சென்று 16 யம புரிகளைத் தாண்டி 17வது முக்கிய யம புரிக்கு அழைத்து செல்கிறார்கள்.

## யமதர்ம ராஜனின் நியாய தர்பார்

யமபுரியின் உள்ளே தர்மசிம்மாசனத்தில் வீற்றிருக்கும் யமதர்மராஜன், சித்ரகுப்தன் ஆகியோருடன் முக்கிய யமதூதர்கள் நியாய தர்பாரில் உள்ளனர்.

## யமதர்மனின் நியாயம் வழங்கும் செயல்முறை

### சித்ரகுப்தன் கர்ம பட்டியலை வாசித்துக் காண்பித்தல்

சித்ரகுப்தன், பாவியின் லிங்கதேஹத்திடம் அதன் வாழ்க்கையில் மனதால், வாக்கால் மற்றும் கர்மாக்களால் ஒவ்வொரு க்ஷணமும் செய்த நல்லதீய கர்மாக்களின் பட்டியலை வாசித்துக் காண்பிக்கிறார்.

### 17 தெய்வீக சக்திகள் அந்தக் கணமே சாட்சி சொல்வதற்கு யமபுரிக்கு வருதல்

லிங்கதேஹம் ஒரே ஒரு கர்மாவை ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும் சித்ரகுப்தனின் அழைப்பால் 17 தெய்வீக சக்திகள் சாட்சி சொல்வதற்கு யமபுரிக்கு அந்தக் கணமே வருகின்றனர். 'பிருத்வி, சூரியன், சந்திரன், வருணன், மேகம், வாயு, அக்னி, குபேரன், காமதேவன்,விச்வகர்மா, தன்வந்தரி, அச்வினிகுமார்கள், இந்திரன், ஸப்தரிஷிகள், நக்ஷத்திர தேவதைகள், க்ருஹதேவதை மற்றும் அந்தரீக்ஷதேவதை', ஆகியவை இந்த 17 தேவதைகளின் பெயர்களாகும்.



### 'அந்தர்சாக்ஷி' எனப்படும் ஆழ்மனம் லிங்கதேஹம்

செய்த பாவ கர்மாக்களை பெருத்த குரலில் கத்தி வெளிப்படுத்துதல் பாவி லிங்கதேஹத்தின் 'அந்தர்சாக்ஷி' எனப்படும் ஆழ்மனம் (விவேகம்) லிங்கதேஹத்தை விட்டு வெளியேறுகிறது. அந்தர்மனம் தெய்வீக சாட்சி தரும் 17 தெய்வங்களுக்கு அருகில் நின்று கொண்டு லிங்கதேஹம் செய்த பாவ கர்மாக்களை பெருத்த குரலில் கத்தி வெளிப்படுத்துகிறது.





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

### கண நேரத்தில் முடிவு செய்தல்

இறந்தவரின் பாவ கர்மாக்களின் பிரமாணம், ஸ்வரூபம் மற்றும் பாவத்தின் தீவிரம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு யமதர்மராஜன் பாவங்கள் தொலைய தண்டனை, தண்டனையின் ஸ்வரூபம், தண்டனையின் காலவரை மற்றும் நரகம் ஆகியவற்றைக் கண நேரத்தில் நிச்சயிக்கிறார். (இதற்கு மாறாக இன்றைய நீதிமுறை நியாயம் வழங்க பல வருடங்கள் எடுக்கின்றன, தருகிற தீர்ப்பும் சரியானதா என்பது நிச்சயம் கிடையாது.) யமராஜன் நிச்சயித்த தண்டனையின் பிரமாணம், ஸ்வரூபம் மற்றும் காலவரை எவ்வளவு துல்லியமானது என்றால் விதிக்கப்பட்ட காலவரைக்குள் பாவங்கள் அனைத்தும் தொலைந்த பின் பாவங்களிலிருந்து விடுபட்ட அந்த லிங்கதேஹம் ஒரே கணத்தில் நரகத்திலிருந்து வெளியே வருகிறது.

### பாவி லிங்கதேஹம் ஒரே கணத்தில் நரகத்தை அடைதல்

சம்பந்தப்பட்ட நரகத்தின் முக்கிய யமதூதர் பாவி லிங்கதேஹத்தை தண்டனையை அனுபவிப்பதற்காக கூட்டி செல்கிறார். அடுத்த கணம் பாவி லிங்கதேஹம் சம்பந்தப்பட்ட நரகத்தை அடைகிறது.

## சிறப்பு நாமம்

யமராஜனின் ஈடுஇணையற்ற தெய்வீக காரியத்தினால் அவருக்கு மிக உயர்ந்த பதவியான 'தர்மமும்' மிக உயர்ந்த சிறப்பு நாமமான 'யமதர்மன்' என்ற பெயரும் கிடைத்துள்ளது!

### நியாயம் வழங்கும் திவ்யசக்தி

யமதர்மராஜன் பாவத்தின் பிரமாணத்திற்கேற்ப நிச்சயிக்கும் தண்டனையின் பிரமாணம், ஸ்வரூபம் மற்றும் காலவரை 100 % துல்லியமாக இருப்பதால் இந்த நிர்ணயம் 100 % ஸத்யமானதாகவும் பரிபூரணமானதாகவும் உள்ளது. யமராஜன் தரும் நிர்ணயம் எல்லா விதங்களிலும் தர்மத்தின் விதிகளை வழுவாதிருப்பதால் இந்த நிர்ணயம் 'நியாயம்' என வழங்கப்படுகிறது. இந்த நியாயத்தை வழங்கும் சக்தி சாமான்ய சக்தியாக இருக்க முடியாது, அது திவ்ய ஸ்வரூபமாகும்.

### கிடைப்பதற்கரிய திவ்யசக்தியே தர்மமாகும்

எந்த திவ்யசக்தியின் ஒவ்வொரு நிர்ணயமும் 'நியாயம்' ஆகிறதோ அது தானே திவ்ய ஸ்வரூபமாக விளங்குகிறது. இவ்வாறான, கிடைப்பதற்கரிய திவ்யசக்திக்கு முக்குணங்கள் நிறைந்த இவ்வுலகில் அதி உன்னதமான 'தர்மம்' என்ற பதம் கிடைத்துள்ளது.

திவ்யசக்தியின் பெயருடன் 'தர்மம்' என்ற வார்த்தை ஆபரணமாக சேர்ந்துள்ளதால் அந்தப் பெயர் அதி உன்னத சிறப்பு வாய்ந்ததாக ஆகிறது. இக்காரணத்தால் யமராஜனுக்கு 'யமதர்மராஜன்' என்ற பெயர் கிடைத்துள்ளது.

### யமதர்மன் மற்றும் தர்மஸ்வரூபமான அம்சாவதாரம்

யமராஜனின் அம்சாவதாரமான மூத்த பாண்டவ சகோதரர் யுதிஷ்டிரரும் 'தர்மராஜன்' என்று மரியாதையுடன் அழைக்கப்படுகிறார். யமராஜனின் இன்னொரு அம்சாவதாரம் 'விதுரர்' ஆவார். அவர் நீதிசாஸ்திரத்தில் வல்லுனராக இருந்தவர். அவர் கூறியுள்ள பிரபலமான 'விதுர நீதி'யே 'விதுரரின் தர்மநீதி' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

குமாரி மதுரா போஸ்லே
(சூட்சுமத்தில் கிடைத்த ஞானம்),
ஸனாதன் ஆச்ரமம், ராம்நாதி, கோவா.
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com




அனைத்து ஆன்மிக செய்திகளையும் உங்கள் மொபைல், டேப் போன்றவற்றிலும் 24x7 மணிநேரமும் பார்த்து பயன்பெறலாம்

GET IT ON Google Play

கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்

Aanmeega malar (mobile app)

டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ–புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து android சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்